

# நல்லோர் நடந்த வழி

3323

எஸ். எஸ். அருணகிரிநாதர்
எழுதியது



PRESENTED BY:
V. PR. K...
KASIVISWANATH...
PAGANERI.



எஸ். வாஸன் கம்பெனி
மயிலாப்பூர்...... மதராஸ்

CH.E PRASAD

# நல்லோர் நடந்த வழி

## இரண்டாம் புத்தகம்

3323

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

சென்னை, தொண்டைமண்டலம்
துளுவவேளாளர் உயர்தரக் கலாசாலை
முதுத் தமிழாசிரியர்
எஸ். எஸ். அருணகிரிநாதர்
எழுதியது

ஸ்ரீ தமிழ்ச் சங்கம்
பாகனேரி.

எஸ். வாஸன் கம்பெனி,
சமுகரங்கபுரம் :: திருநெல்வேலி ஜில்லா,
மயிலாப்பூர் :: மதராஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1949 [விலை அணா 12

*Reprint—1949*

Approved by the Text-Book Committee, Madras for Class use Vide Fort St., George Gazette, Part I-B Page 22 dated 1—6—1948

NATIONAL ART PRESS, 91, MOUNT ROAD, MADRAS—18

# முன்னுரை

பெருமக்களின் உண்மையான வாழ்க்கைவரலாறுகளைப் படிப்பதில் எனக்கு இளம்பருவமுதற்கொண்டே விருப்பம் அதிகம். ஆகலின், நான் நூற்றுக்கு அதிகமான பெருமக்கள்வாழ்க்கைவரலாறுகளைப் படித்திருக்கிறேன்; இப்போதும் நேரம் வாய்த்தபோதெல்லாம் படித்துக்கொண்டுமிருக்கின்றேன். இப்படி நான் படிக்கும்போதெல்லாம் 'இப் பெருமக்களின் வாழ்க்கைவரலாறுகளில் காணப்படுகின்ற நல்ல நிகழ்ச்சிகளைப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் நம்முடைய சிறுவர்களுக்குச் சொல்லவேண்டும்' என்று எண்ணுவது உண்டு. அந்த எண்ணம் இப்போதுதான் ஒருவாறு நிறைவேறச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்தப் புஸ்தகத்தில் உள்ள நிகழ்ச்சிகளெல்லாம் நம் நாட்டுப் பெருமக்களின் வாழ்க்கைவரலாறுகளிலிருந்தே எடுக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கு உயர்ந்த ஒழுக்கத்தையும் மிகுந்த ஊக்கத்தையும் தரவல்ல நிகழ்ச்சிகளே இதில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட புஸ்தகங்களை எழுதுவது எவ்வளவோ சிரமமான வேலை என்பது அநுபவமுள்ளவர்கள் அறிவார்கள்.

அறுபது புஸ்தங்களுக்கு அதிகமாக எழுதியுள்ள யான் இதையும் இளமாணாக்கருலகிற்கு மகிழ்ச்சியோடு அனுப்புகிறேன். இதனால் அவர்கள் பயன் அடைவார்களானால், அதைவிட நான் அடையக்கூடிய மகிழ்ச்சி வேறில்லை.

எஸ். எஸ். அருணகிரிநாதர்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பூண்டி அரங்கநாத முதலியார் | 5 |
| 2. | திவான்பஹதூர் கோவிந்தராகவ ஐயர் | 16 |
| 3. | சொன்ன சொல் தவறாதவர் | 23 |
| 4. | பெருந்தன்மை | 32 |
| 5 | திறமைக்குப் பதவி | 37 |
| 6. | தாலியையும் ஈந்தவர் | 48 |
| 7. | களமூர், வீரவல்லி அரங்கநாத சாஸ்திரியார் | 62 |
| 8. | சர். தி. முத்துசாமி ஐயர் | 75 |
| 9. | மாணாக்கனது மனத்துயர் தீர்த்தவர் | 87 |



# நல்லோர் நடந்த வழி

## இரண்டாம் புத்தகம்

---

### 1. பூண்டி அரங்கநாத முதலியார்

மக்களுள் அறிவில்லாதவர்களை எங்கெங்கும் காணலாம். சிறிது அறிவு உள்ளவர்களையும் பல இடங்களில் காணலாம். ஆனால், முழுஅறிவு படைத்தவர்களைக் காண்பது எளிதன்று. முழு அறிவு உள்ளவர்கள் எங்கோ ஒருவர்தாம் அபூர்வமாகக் காணப்படுவார்கள். முழுஅறிவு படைத்தவர்கள் என்றால் யார்?

எந்தச் செய்திகளிலும் உண்மையை அறியக் கூடிய அறிவுள்ளவர்களே முழுஅறிவு படைத்தவர்கள் என்று சொல்லப்படுவார்கள். முழுஅறிவு உள்ளவர்களுக்கு விளங்காதது ஒன்றில்லை. எல்லாவற்றைப்பற்றியும் உள்ளவாறு உணருந் திறமை அவர்களுக்கு உண்டு. அவர்கள் எதைச்செய்தாலும் நன்றாகச் செய்வார்கள்.

இத்தகைய முழுஅறிவு படைத்தவர்கள் நமது நாட்டில் பலர் இருந்தார்கள்; இருக்கிறார்கள். நமது நாட்டில் வாழ்ந்த பூண்டி அரங்கநாத முதலியார் இத்தகையோருள் ஒருவராவர். இவர் பேரறிஞர்கள் என்று புகழப்பட்ட சர். தி. முத்துசாமி ஐயரவர்களாலும், டாக்டர் வில்லியம் மில்லர் அவர்களாலும், ஜான் புரூஸ் நார்ட்டன் அவர்க-

ளாலும், இன்னும் இவர்களைப்போன்ற ஐரோப்பியர்களாலும், நம்மனோராலும், "பேரறிவு படைத்தவர், நல்லவர்" என்று புகழப்பெற்றவர்; "மெட்ரிக்குலேஷன், பி. ஏ., எம். ஏ.," முதலிய பரீட்சைகள் ஒவ்வொன்றிலும் முதல்வராகத் தேர்ந்தவர்; கணக்கு, தர்க்கம், சரித்திரம், நீதித்தத்துவம், தமிழ் முதலியவைகளில் சிறந்து விளங்கியவர்.

இத்தகைய அறிஞராகிய அரங்கநாத முதலியாரவர்கள் தங் காலத்திலேயே "அறிவாளி" என்று அறிஞர்களால் புகழப்பட்டார். அதற்கு உதாரணமாக, அவர்வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுவோம்.

## 1. அறிவிற் சிறந்தவர்

அரங்கநாத முதலியாரவர்களிடத்தில் சர். தி. முத்துசாமி ஐயரவர்களுக்கு அளவு கடந்த மதிப்பு உண்டு. அதுகாரணமாக அரங்கநாத முதலியாரவர்களும் முத்துசாமி ஐயரவர்களும் நெருங்கிய நண்பர்களாயினர். இவர்கள் இருவரும் ஒருவரை மற்றொருவர் அடிக்கடி பார்த்துப் பழகி வந்தார்கள்.

விடுமுறைக் காலத்தில் ஒருநாள், தம்முடன் நீதிமன்றத்தில் வேலை பார்த்துவரும் நீதிபதி ஹாலோவே என்னும் ஐரோப்பியரின் பங்களாவுக்கு முத்துசாமி ஐயரவர்கள் அரங்கநாத முதலியாரை அழைத்துக்கொண்டு சென்றார்கள். அங்கு முத்துசாமி ஐயர் அரங்கநாத முதலியாரை நீதிபதி ஹாலோவே அவர்களுக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். நீதிபதி ஹாலோவே அதற்கு-

முன்னரே அரங்கநாதமுதலியாரவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அதனால், அவர் அரங்கநாத முதலியாருடன் மிக்க மரியாதையாகப் பேசினார்.

முத்துசாமி ஐயர், ஹாலோவே, அரங்கநாத முதலியார் ஆகிய மூவரும் பேசிக்கொண்டிருக்கையில் ஏதோ ஒரு செய்தி காரணமாக முத்துசாமி ஐயர் ஹாலோவே அவர்களிடம், "நண்பர் அரங்கநாத முதலியார் நல்ல அறிஞர்; பகுத்தறிவு மிக்கவர்; சட்டம் பயிலாதவராய் இருந்தாலும், ஒருவழக்கை இவரிடம் சொன்னால் அதைப்பற்றி இவர் கூறுந் தீர்ப்பு நாம் ஒப்புக்கொள்ளக்கூடியதாகவே இருக்கும்" என்று சொன்னார்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் ஹாலோவே, "அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன். நான் இரண்டு வாரங்களாக விசாரித்த ஒரு வழக்கைப்பற்றி இன்று காலையில் தீர்ப்பு எழுதிவைத்திருக்கிறேன்; அந்த வழக்கை விரிவாகச் சொல்லுகிறேன். நான் சொல்லும் வழக்கின் செய்திகளை நீங்கள் இருவரும் தனித்தனியே குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்; பிறகு தனித்தனியே இருந்து ஆராய்ந்து தீர்ப்பு எழுதுங்கள். நம் மூவர்தீர்ப்பும் எப்படி இருக்குமோ! பார்க்கலாம்" என்றார்.

உடனே முத்துசாமிஐயர் அரங்கநாத முதலியாரின் முகத்தைப் பார்த்தார். அவர்கருத்தை அறிந்துகொண்ட அரங்கநாத முதலியார் "சரி" என்றார். பிறகு, ஹாலோவே சொல்லிய வழக்கை இருவரும் குறித்துக்கொண்டனர்.

பின்னர், தனித்தனியே இருந்து முதலியாரவர்களும் ஐயரவர்களும் ஆராய்ந்தனர். ஒருமணி

நேரத்திற்குப் பிறகு இருவரும் தங்கள் தங்கள் தீர்ப்புகளைத் தனித்தனியே எழுதி நீதிபதி ஹாலோவே அவர்களிடம் கொடுத்தார்கள். ஹாலோவே அந்தத் தீர்ப்புக்களைப் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஏன்? ஹாலோவே எழுதிவைத்திருந்த தீர்ப்பும், முத்து-சாமிஐயரவர்கள் எழுதிய தீர்ப்பும் அரங்கநாத முதலியாரவர்கள் எழுதிய தீர்ப்பும் ஒரேவிதமாய் இருந்தன.

ஆச்சரிய மடைந்த ஹாலோவே அரங்கநாத முதலியாரவர்களைப் பார்த்து, "முத்துசாமிஐயரவர்-களின் தீர்ப்பும் என் தீர்ப்பும் ஒரேவிதமாய் இருப்-பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், சட்டம் பயிலாத நீங்கள் எங்களைப்போலவே சரியாகத் தீர்ப்பு எழுதியதுதான் ஆச்சரியத்திலும் ஆச்ச-ரியம். எங்களைப்போலவே இப்படிச் சரியாகத் தீர்ப்பு எழுத உங்களால் எப்படி முடிந்தது? நீங்கள் சட்டம் பயிலவில்லையே!" என்று சொன்னார்.

உடனே அரங்கநாத முதலியாரவர்கள் ஹாலோவே அவர்களைப் பார்த்து, "சட்டம் பயிலா-விட்டால் என்ன? சட்டம் பயிலாவிட்டால் நியாயத்-தைச் சொல்ல முடியாதா? பகுத்தறிவுதானே சட்டம் என்பது! சட்டத்தை ஏற்படுத்தியவர்கள் பகுத்தறிவைத் துணைகொண்டுதானே 'இந்த வழக்கிற்கு இது நியாயமாகும்' என்று தீர்மானித்-திருப்பார்கள். அந்தப் பகுத்தறிவைத் துணை கொண்டு நாம் ஆராய்ந்தால், இந்த வழக்குக்கு இது நியாயம் என்பது நமக்கும் தெரியும். என்னுடைய பகுத்தறிவுதான் என் தீர்ப்பிற்குக் காரணம்" என்று சொன்னார்.

"அரங்கநாத முதலியார் சட்டநூல் அறிவு உள்ளவர்" என்று முத்துசாமிஐயர் சொல்லிய வார்த்தை முக்காலும் உண்மை என்று நினைத்து, ஹாலோவேஅவர்கள் அரங்கநாத முதலியாரவர்க-ளிடம் பின்னும் பெருமதிப்புக்கொண்டார்.

இத்தகைய அறிஞரான அரங்கநாதரைப்பற்றி நாம் நன்ருகத் தெரிந்துகொள்வது நல்லது-தானே!

## 2. "செய்வன செய்தல் இனிதே"

அரங்கநாத முதலியாரவர்கள் பார்வைக்கு முருடரைப்போலத் தோன்றுவார். ஆனல், அவர்-உள்ளம் மிக்க உருக்க முள்ளது. பிறர்துன்பத்-தைக் கண்டு அவர் சகிக்கமாட்டார். அதிலும் கல்வி கற்கும் மாணுக்கர்கள் துன்பப்படுகிருர்கள் என்ருல் அவர்கள்துன்பத்தைப் போக்க அவர் தம்மா லானவரையில் பாடுபடுவார்.

எந்த நாட்டிலும் நல்லவர்களின் குணம் இப்-படித்தான் இருக்கும். பெருங்குணம் படைத்தவர் எப்போதும் பிறர்துன்பத்தைத் தங்கள் துன்ப-மாகவே கருதி இரக்கம் உறுவார்கள். பிறர்-துன்பத்தைக் கண்டவுடன் அவர்கள் மனம் மெழுகுபோல உருகிவிடும். இத்தகைய தன்மை உள்ளவர்தாம் அரங்கநாத முதலியாரவர்கள்.

அரங்கநாத முதலியாரவர்களின் திறமையை-யும் அறிவையும் நோக்கின், அவர்கள் எந்தத் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் அதில் சிறந்-திருப்பார்கள் என்பது விளங்கும். சர். தி. முத்து-சாமி ஐயரவர்கள் அரங்கநாதரைப்பற்றிப் பேசும்-

போது, "அரங்கநாத முதலியார் ஒரு நியாயவாதியாகவோ, நீதிபதியாகவோ, டாக்டராகவோ, இஞ்சினீயராகவோ இருக்க நினைத்து அந்தந்தத் தொழில்களுக் கேற்றவாறு படித்திருப்பாரானல், இப்போது, மேற்கூறப்பட்ட தொழிலில் இருப்போர்எல்லாரும் அவருக்குப் பின்னல் நிற்க வேண்டியவர்களே" என்று சொல்லியிருக்கிருர்கள். 1890-ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு அரங்கநாத முதலியார் ஆற்றிய சொற்பொழிவைக் காட்டன் என்னும் பெயருள்ள ஒருவர் படித்துவிட்டு, "உங்கள் சொற்பொழிவைச் சென்னையில் மட்டுமல்ல; இந்தியாவில் மட்டுமல்ல; இங்கிலாந்திலுள்ள ஐரோப்பியர்களும் படிக்கவேண்டும்" என்று அரங்கநாத முதலியாருக்கு எழுதினர்.

இவ்வளவு திறமை வாய்ந்த முதலியாரவர்கள் தாம் படித்துத் தேர்ந்த இராசதானிக்கல்லூரியிலேயே கணிதநூற் பேராசிரியராயிருந்தார்கள். பேராசை இல்லாமையும் கல்வியின் மீது அவருக்கு இருந்த ஆசையுமே அவரை ஆசிரியராய் இருக்கச்செய்ததுபோலும்! வேறு சிலராயின், இவ்வளவு திறமை இருக்கும்போது, வருவாய் மிக்க வேறு தொழிலில் புகுந்து பணத்தைத் தேடியிருப்பார்கள்.

முதலியாரவர்கள் கணிதநூற் பேராசிரியராய் இருந்தாலும் ஆங்கிலம் முதலிய வேறு கலைகளைப் போதிப்பதிலும் நிகரின்றி விளங்கினர்கள். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள நாடகங்களைப் பக்கம் பக்கமாகப் பார்க்காமற் சொல்லுவார்; ஆங்கிலேயரைப்போலவே உச்சரிப்பார். "அரங்கநாத முதலியார் ஆங்கிலம் பேசும்போது நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு கேட்பீர்களாயின், ஆங்கிலேயரே பேசுகின்றூர் என்று நினைப்பீர்கள்"

என்று ஸர்.பி. சிவஸ்வாமி ஐயரவர்கள் எழுதியிருக்கிருர்கள். முதலியாரவர்கள் தமிழிலும் திருக்குறள் போன்ற நூல்களை உரையோடு ஒப்பிப்பார்கள். இவைமட்டு மல்ல. மாணுக்கர்களுக்கு எதைச் சொன்னுலும் அது அப்படியே அவர்களுள்ளத்தில் பதியும்படி சொல்வார்கள். அவர்கள் சொல்வதைமட்டும் கேட்டாலே மாணுக்கர்கள் படிக்காமல் பரீட்சையில் தேர்ந்துவிடுவார்கள். அவ்வளவு விளக்கமாகவும் தெளிவாகவும் போதிப்பதில் முதலியாரவர்கள் வல்லவர்கள்.

திறமை உள்ள மாணுக்கர்களிடத்தில் அரங்கநாதருக்கு அளவுகடந்த அன்பு உண்டாவது வழக்கம். அவர்களிடத்தில், தாம் ஒரு பேராசிரியர் என்பதையும் மறந்து, எளிமையாகப் பழகுவார்; அவர்கள் ஏழைகளாய் இருந்தால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்யத் தாமதிக்கமாட்டார். இதற்கு உதாரணமாக, முதலியாரவர்களின் கல்லூரிவாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

கோபாலன் என்னும் பெயருள்ள ஒரு மாணுக்கன் பீ. ஏ. வகுப்பில், அரங்கநாத முதலியாரவர்களிடத்தில் படித்துக்கொண்டிருந்தான். அவன் அவ் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சிறந்த மாணுக்கர்களுள் ஒருவன். எவ்வளவு நுட்பமான செய்திகளையும் சொன்னவுடன் தெரிந்துகொள்ளுவான். அதனுல் ஆசிரியர்கள் எல்லாரும் அவனிடம் அதிக அன்பு கொண்டிருந்தார்கள். அரங்கநாத முதலியார் அவனிடம் மிக்க அன்பு செலுத்திவந்தார்.

அரைவருடப் பரீட்சை நடந்து, விடுமுறை விடப்பட்டுக் கல்லூரி திறக்கப்பட்டது. வகுப்பில்

சிலநாள்வரையில் கோபாலனைக் காணவில்லை. அதை மற்ற ஆசிரியர்கள் கவனித்தும் ஒன்றும் கேட்காமலே தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போனார்கள். ஆனால், அரங்கநாத முதலியார் 'கல்லூரிக்குக் கோபாலன் வாராமைக்குக் காரணம் என்ன?' என்று பலரைக் கேட்டார். கோபாலன் இருப்பிடம் புரசைப்பாக்கமென்றும், அங்கிருந்து இராசதானிக் கல்லூரிக்கு வருகிற மாணாக்கர்கள் வேறு ஒருவருமில்லையாதலால் அவன் கல்லூரிக்கு வாராமைக்குக் காரணம் தெரியவில்லையென்றும் சில மாணாக்கர்கள் சொன்னார்கள். அரங்கநாத முதலியார் அன்று தமது போதனையை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போகும்போது, கோபாலன் இருக்குமிடத்தைக் கல்லூரியில் கேட்டுக்கொண்டு போனார்.

மறுநாள் புரசைப்பாக்கம் வேளாளர்வீதியில் இருந்த ஒரு சாதாரண ஓட்டுவீட்டிற்குள், "கோபாலா! கோபாலா!" என்று கூப்பிட்டுக்கொண்டே அரங்கநாத முதலியார் நுழைந்தார். சுமார் பதினெட்டு வயதுள்ள இளைஞன், "சார், சார், வாருங்கள். இவ்வளவு தூரம் இந்த ஏழையின் மீது தயை செய்து வந்துவிட்டீர்களே!" என்று சொல்லிக்கொண்டே அரங்கநாத முதலியாரை அழைத்துக்கொண்டு போய், கூடத்தில் இருந்த ஒரு நாற்காலியில் உட்காருவித்தான். அப்பொழுது அங்கே ஒரு கிழவர் வந்தார். "இவர் என் தாதா; என் தகப்பனாரின் தகப்பனார்" என்று கோபாலன் சொன்னான். அப்படிச் சொல்லும்போது அவன் முகம் வாடியது. கோபாலனுடைய பாட்டனாரின் முகமும் வாடியது.

உடனே முதலியார் கோபாலனைப் பார்த்து, "நீ ஏன் கல்லூரிக்கு வாராமல் இருந்துவிட்டாய்?

நீ நன்ருகப் படிக்கிற பிள்ளை ஆயிற்றே! விடாமல் படித்தால்தானே முதல்வகுப்பில் தேரலாம்'' என்று சொன்னர்.

அப்போது கோபாலன்கண்கள் கலங்கின. காரணம் தெரியாமல் முதலியார் திகைத்-தார்.

அங்கிருந்த கோபாலன்பாட்டனர் முதலி-யாரைப் பார்த்து, "விடுமுறை நாளில் இவன் தகப்பன் திடீரென்று இரண்டு நாள் காய்ச்சல் கண்டு இறந்துபோனன். கோட்டையில் அவன் மாதம் அறுபது ரூபாய் சம்பாதித்துக்கொண் டிருந்தான். இப்போது எங்கள் கதி நிர்க்கதி யாய், விட்டது. எங்களுக்குப் பூர்விகஆஸ்தி ஒன்றும் கிடையாது. இனிமேல் கோபாலன் படிப்பதற்கு வழி இல்லை. இவன் வேலைக்குப் போனல்தான் குடும்பம் நடைபெறும். இவன் தங்கை ஒருத்தி இருக்கின்ருள். அவளுக்குக் கலியாணம் ஆக-வேண்டும். இந்த நிலையில் இவன் இனிமேல் எப்படிப் படிப்பான்?'' என்று நிறைந்த வருத்தத்-தோடு சொன்னர்.

உடனே அரங்கநாத முதலியார் கோபாலனைப் பார்த்து, "கோபாலா, உன் தந்தை இறந்த செய்தி இதுவரையில் எனக்குத் தெரியவே தெரியாது. வகுப்பில் உன்னைக் காணுமையினல் உன்னைத் தேடி வந்தேன். சரி; நடந்த செய்தியை நினைப்-பதனல் இனி நடக்கவேண்டிய வேலை கெடும். இந்த வருடத்தோடு உன்னுடைய பீ. ஏ. படிப்பு முடிகிறது. இப்பொழுது படிப்பை நிறுத்தலாமா! அதிலும் தேர்தல் பரீட்சைக்கு நான்கு மாதங்கள்-தாம் இடையில் இருக்கின்றன. பீ. ஏ. பரீட்சை-

யில் தேர்ந்துவிட்டால் எந்த வேலைக்கு வேண்டு-மானாலும் போகலாம்; முயற்சியும் துணையும் இருந்-தால் எவ்வளவோ உயர்வடையலாம். இதையெல்-லாம் நீ கவனிக்கவில்லையா?'' என்று சொன்னார்.

அதற்குக் கோபாலன், "நானும், என்பாட்ட-னரும், தாயாரும் எல்லாச் செய்திகளைப்பற்றியும் ஆலோசித்தோம். சாப்பாட்டுக்கே வழி இல்லாத-போது படிப்பதெப்படி என்று நினைத்து, படிப்பை நிறுத்தி வேலைக்குப் போவது என்று முடிவு கட்டி-னோம்'' என்று சொன்னான்.

உடனே அரங்கநாதர் அவனைப் பார்த்து, "இன்றுமுதல் நீ பீ. ஏ. பரீட்சையில் தேர்கிற-வரையில் மாதம் இருபது ரூபாய் உன் குடும்பத்திற்-குக் கொடுத்துவருகிறேன். பரீட்சையில் தேர்ந்த-வுடன் நானே உனக்கு ஒரு நல்ல வேலை பார்த்துத்-தருகிறேன்; உன் கல்லூரிச்சம்பளத்தையும் கட்டி-வருகிறேன். நீ என் வார்த்தையைத் தடை செய்யாமல் இன்றைக்கே என்னோடு புறப்பட்டுக் கல்லூரிக்கு வா. கல்லூரியில் இருபது ரூபாய் உன்னிடம் தருகிறேன். அதை இந்தமாத வீட்டுச் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள்.'' என்று சொன்னார்.

இந்தப் பேச்சுக்களையெல்லாம் மறைவில் நின்று கேட்டுக்கொண்டிருந்த கோபாலன் தாயார் மறைவி லிருந்தபடியே, "இந்த உதவியை நாங்-கள் எங்கள் உயிர் உள்ளவரையில் மறக்கமாட்-டோம்'' என்று துன்பம் கலந்த குரலோடு சொன்னார்.

"பேசுகிறவர் என் தாயார்'' என்றான் கோபாலன். "கவலைப்படாதீர்கள் அம்மா.

கோபாலனை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அவனை என்னோடு அனுப்புங்கள். அவன் இன்னும் நான்கு மாத காலந்தான் படிக்கவேண்டும்'' என்றார் அரங்கநாதர்.

"தாராளமாய் அழைத்துக்கொண்டு போகலாம். இன்றுமுதல் அவன் உங்கள் பிள்ளைதான்'' என்றார் கோபாலன் தாயார்.

அப்போது கோபாலனுடைய பாட்டனார் அரங்கநாதமுதலியாரைப் பார்த்து, "பிராமணர்களாகிய எங்களுக்கு இதுவரையில் எந்தப் பிராமணனும் இப்படி உதவி செய்ய முன் வரவில்லை. உங்களைப் 'பரோபகாரி' என்றுதான் சொல்லவேண்டும். தண்ணீரில் முழுகும் ஒருவனைத் தூக்கிவிட வந்தவரைப்போலத் தாங்கள் வந்தீர்கள். உங்களை நாங்கள் தலைமுறை தலைமுறையாக மறக்கமுடியாது. எங்கள் குடும்பம் உங்களால்தான் முன்னுக்கு வரவேண்டும்'' என்று இன்னும் பல நன்றியறிதல் நிறைந்த வார்த்தைகளைச் சொன்னார்.

"அப்படிச் சொல்லாதீர்கள். நான் ஒன்றும் அதிகமாகச் செய்ய முன்வந்துவிடவில்லை. தெரிந்தால் இந்த உதவியைச் செய்யக்கூடியவர்கள் இன்னும் எத்தனையோ பேர்கள் இருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு, அரங்கநாத முதலியார் கோபாலனை அழைத்துக்கொண்டு கல்லூரிக்குச் சென்றார்.

அரங்கநாத முதலியார் தாம் சொல்லியபடி கோபாலனுக்கு உதவி செய்துவந்தார். கோபால-

னும் நன்றாகப் படித்து அவ்வருடம் பீ. ஏ. பரீட்சையில், முதலியார் நினைத்தபடியே முதல் வகுப்பில் தேர்ந்தான்.


---

# 2. திவான்பஹதூர் கோவிந்தராகவஐயர்

நமது நாடு என்றும் பரோபகாரத்திற்குப் பேர்போனது. இந்த நாட்டில் ஆடம்பரமில்லாமல் பிறருக்கு உதவி செய்தவர்கள் எத்தனையோபேர் இருந்தார்கள்; இருக்கிறார்கள். அவர்களுட் சிலரை நாம் அறிவோம்; பலரை அறியோம்.

பிறருக்கு உதவுமிடத்தும், காணார், கேளார், கால் முடம்பட்டோர், நீப்பிணியாளர் முதலியவர்களுக்குச் செய்யும் உதவியே சிறந்ததென்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். எல்லாத்தானத்துக்கும் மேலான தானம் அன்னதானம் என்று பல நூல்கள் கூறுகின்றன. "அன்ன மயம் பிராணமயம்." "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே." ஆகையால், அன்னதானமே சிறந்ததாகும்.

இத்தகைய அன்னதானத்தைச் சிறப்பாக, கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கும், பொதுவாக



மற்ற எல்லாருக்கும் செய்து தம்முடைய செல்வத்தையெல்லாம் இழந்து அழியாப் புகழ் பெற்ற திவான்பஹதூர், லாலாபேட்டை கோவிந்தராகவ ஐயரை அறிந்தவர்கள் சென்னையில் இன்றும் பலர் இருக்கின்றார்கள். லாலாபேட்டை என்னும் ஊர் வட ஆர்க்காட்டு ஜில்லாவில், ஆர்க்காட்டுக்கு நான்கு மைல் தூரத்தில் இருக்கின்றது.

கோவிந்தராகவ ஐயரவர்கள் இளமையில் சித்தூர் உயர்தரப் பாடசாலையிலும் பிறகு சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி பயின்றார்கள்; சுமார் 68 ஆண்டு இவ்வுலகில் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் சென்னையில் இருந்த பிரசித்தி பெற்ற வக்கீல்களுள் ஒருவராவர். சென்னை, பச்சையப்பன் அறநிலையப் பாதுகாப்பாளர்களுள் அவர்களும் ஒருவராய் இருந்தார்கள். அவர்கள் நன்றாகச் சம்பாதித்து நல்ல வழியிற் செலவு செய்தார்கள். எப்பொழுதும் அவர்கள்வீட்டில் அயலார், வேளை ஒன்றுக்கு ஐம்பதின்மருக்குக் குறையாமல், அவர்கள் சாப்பிடும் உணவைப்போன்ற உயர்ந்த உணவையே சாப்பிடுவார்கள். அப்படிச் சாப்பிட்டவர்களுள் பெரும்பான்மையோர் மாணாக்கர்களே. அவர்களுட் பலர் இன்று நல்ல நிலையில் இருக்கின்றனர்.

மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் சாப்பாடு போட்டதற்காகமட்டும் நான் கோவிந்தராகவ ஐயரவர்களைப்பற்றி இங்கு எழுத வரவில்லை. அவருடைய பெருங்குணத்தைக் குறிக்கவல்ல நிகழ்ச்சியொன்று அவர்வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கின்றது. அதைத் தெரிவிக்கவே நான் அவரைப்பற்றி

எழுத முற்பட்டேன். அந்த நிகழ்ச்சி, பிரெஞ்சு மொழியில் "விக்டர் யூகோ" என்பவர் எழுதியுள்ள "லே மிஸரபிள்" என்னும் நாவலில் காணப்படும் ஒரு நிகழ்ச்சியைப் போன்றது. ஆனால், அது கற்பனை; இது உண்மை நிகழ்ச்சி.

ஐயரவர்களின் வீட்டில் மணி என்பவன் ஒருவன் சுமார் பத்து ஆண்டுகள்வரை இட்ட வேலையைச் செய்துவந்தான். ஐயரவர்களும் அவர்கள்வீட்டில் இருந்தவர்களும் அவனிடம் மிக்க அன்பாகவே நடந்துவந்தார்கள்.

ஒருநாள் ஐயரவர்கள்வீட்டில் கடிகாரத் தங்கச் சங்கிலி ஒன்று காணமற் போயிற்று. உடனே வீடு முழுவதும் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. மேஜைகளுக்குள்ளும், பீரோக்களுக்குள்ளும், தலையணைகளின் கீழும் சட்டப்புஸ்தகங்களுக்கிடையிலும் இன்னும் பலஇடங்களிலும் அச் சங்கிலியை எல்லாரும் தேடினர்கள். மணியும் தேடினன். தங்கச்சங்கிலி அகப்படவே இல்லை. தேடித்தேடி எல்லாரும் அலுத்துப்போனர்கள்; "எங்கேயோ தொலைந்து போய்விட்டது; யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டனர்" என்னும் முடிவுக்கு வந்துவிட்டனர். "இனி அதைப்பற்றி நினைக்கவும் வேண்டாம்" என்று ஐயரவர்கள் கட்டளை இட்டுவிட்டார்கள். ஆகவே, அச் சங்கிலியைப்பற்றிப் பேசுவதையும் மறந்துவிட்டனர்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, மணி, தன் ஊருக்குச் சென்று தன் தாயைப் பார்த்துவிட்டு வருவதாக ஐயரவர்களிடம் சொல்லி, உத்தரவு பெற்றுக்கொண்டு போனன்.

அன்று மாலை சென்னையில், 'சைனு பஜார்' என்று சொல்லப்படுகின்ற சின்னகடைத்தெரு-வில் உள்ள பொன் வெள்ளிப்பொருள்கள் விற்குங் கடை ஒன்றில், கோவிந்தராகவ ஐயர்வீட்டில் காணமற்போன தங்கச்சங்கிலியை மணி விற்க முயற்சி செய்தான்.

கடைக்குச் சொந்தக்காரராகிய செட்டியார் மணியின் எளிய நிலைமையும் மாறுபட்ட முகத்-தோற்றத்தையும் பார்த்து அவன்மீது சந்தேகங் கொண்டு, "இந்தத் தங்கச்சங்கிலி யாருடையது?" என்று கேட்டார்.

"என்னுடையதுதான்; என் மாமியார்வீட்டில் எனக்குச் செய்து தந்தார்கள்" என்று மணி அவசரமாகப் பதில் சொன்னன்.

"இது எத்தனை சவரனல் செய்யப்பட்டது?" என்று கேட்டார் செட்டியார்.

"எனக்குத் தெரியாது. இனமாகக் கொடுக்கப் பட்டதை நான் எதற்காக எடை போட்டுப் பார்க்கப் போகிறேன்" என்ருன் மணி.

மணி பதில் சொல்லும்போதெல்லாம் அவன்-வார்த்தைகள் சரியாக வெளிவரவில்லை. நா குழறி-யது. இவைகள் அவனைச் சந்தேகப்படச் செய்தன.

உடனே செட்டியார் தங்கச்சங்கிலியைப் பெட்-டிக்குள் வைத்துக்கொண்டு, தம் கடையில் இருந்த சிறுவனை அருகில் அழைத்து, அவன்காதில் ஏதோ சில வார்த்தைகளை இரகசியமாகச் சொன்னர். உடனே சிறுவன் கடையிலிருந்து வெளியே சென்-

ளுன். சிறிது நேரம் செட்டியார் மணியினிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தார். வெளியே சென்ற சிறுவன் ஒரு "போலீஸ்" சேவகருடன் அங்கு வந்தான். போலீஸ்சேவகரைக் கண்டவுடன் மணி ஓட ஆரம்பித்தான். செட்டியாரின் ஏவலால் போலீஸ்சேவகர் அவனைத் தாவிப் பிடித்துக்கொண்டார்.

பிறகு, மணியைத் தங்கச்சங்கிலியுடன் போலீஸ்சேவகர் "போலீஸ் ஸ்டேஷ" னுக்குக் கொண்டுபோனுர். அங்கே சென்ற சிறிது நேரத்திற்குள் மணி அந்தத் தங்கச்சங்கிலியைத் தனக்கு வக்கீல் கோவிந்த ராகவையர் கொடுத்தார் என்று இன்ஸ்பெக்டரிடம் சொன்னுன். அவன் சொல்லியது உண்மைதானு என்று அறிந்து வரும்படி அவனையும் அவனுடன் ஒரு தலைமைச்சேவகரையும் வக்கீல் கோவிந்தராகவையரிடம் இன்ஸ்பெக்டர் அனுப்பினுர்.

தலைமைச்சேவகரும் மணியும் கோவிந்த ராகவையர் பங்களாவுக்குட் சென்றபோது, ஐயர் வெளிப்புறத்து வராந்தாவில் ஒரு சாய்வுநாற்காலியில் சாய்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அவ்ரருகில் தலைமைச்சேவகரும் மணியும் சென்றவுடன் அவர் பத்திரிகை படிப்பதை நிறுத்திவிட்டு அவர்களைப் பார்த்தார்.

உடனே தலைமைச்சேவகர் ஐயரை வணங்கி, நடந்த எல்லாச் செய்திகளையும் விவரமாகச் சொல்லி, "மணி சொல்லியது உண்மைதானு? நீங்கள் இந்தத் தங்கச்சங்கிலியை மணிக்குக் கொடுத்தீர்களா? இதை அறிந்து வருமாறு என்னை இன்ஸ்பெக்டர் அனுப்பினுர்" என்ருர்.

உடனே ஐயர், "நான் இந்தத் தங்கச் சங்கிலியை மணிக்கு இனுமாகக் கொடுத்தேன். இதில் உங்களுக்குச் சந்தேகம் வரக் காரணம் என்ன?" என்று சொல்லிவிட்டு, மணியைப் பார்த்து, "மணி, என்னடா இது! நான்தானே கொடுத்தேன். ஏன் நீ அதை இவர்களிடம் தைரியமாகச் சொல்லக் கூடாது?" என்று கேட்டார்.

ஐயர் இப்படிப் பேசியது மணி எதிர்பார்த்த நிகழ்ச்சியாய் இல்லை. ஆதலின் அவன், தன் செய்கைக்கு வெட்கித் தலை குனிந்து மௌனியாய் இருந்தான்.

ஐயர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடன் தலைமைச்சேவகர், "நீங்கள் கொடுத்ததாகத்தான் இவர் சொன்னார்" என்றார்.

"ஆயின், உங்களுக்குச் சந்தேகம் வரக் காரணம் என்ன?" என்று கேட்டார் ஐயர்.

"இவர்நிலைமை, இவர்செய்கை, இவர்தோற்றம் ஆகிய எல்லாம் ஒருங்கு சேர்ந்து எங்களுக்கு இவர்மீது சந்தேகத்தை உண்டாக்கிவிட்டன" என்றார் தலைமைச்சேவகர்.

"இவன் இப்படித்தான் எப்பொழுதும் அசடுமாதிரி நடந்துகொள்வான். நான்தான் இந்தத் தங்கச்சங்கிலியை இவனுக்குக் கொடுத்தேன். ஆனால், இதை இவன் இவ்வளவு சீக்கிரமாக விற்பதற்குக் கொண்டுபோவான் என்று நான் நினைக்கவில்லை. நீ என்னிடம் தங்கச்சங்கிலியைக் கொடுத்துவிட்டுப் போகலாம்" என்று ஐயர் சொன்னார்.

உடனே தலைமைச்சேவகர் தங்கச்சங்கிலியை ஐயரவர்களிடம் கொடுத்து, அவரை வணங்கிப் போய்விட்டார்.

தலைமைச்சேவகர் சென்றபின்னும் மணி குனிந்த தலை நிமிராமல் ஐயர்எதிரில் நின்றுகொண்டிருந்தான். அப்போது ஐயர் அவனை நோக்கி, "அட அசடே, இப்படிச் செய்ய உனக்கு யாரடா கற்றுக்கொடுத்தார்கள்? இதுதான் நீ ஊருக்குப் போகும் இலட்சணமோ? போ; உள்ளே போய் வழக்கம்போல வேலைகளைச் செய். நடந்ததை யாரிடத்திலும் சொல்லாதே" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அங்கே ஐயரின் மனைவியார் வந்தார். அவர் ஐயரின் எதிரில் சிறிய வட்ட மேஜையின்மீது, காணாமற்போன தங்கச்சங்கிலி இருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்து, "இது எங்கிருந்து கிடைத்தது? எப்படி இங்கே வந்தது?" என்று கேட்டார்.

உடனே ஐயர், "நான் தோட்டத்தில் உலவிக்கொண்டிருக்கையில் ஒரு தொட்டிக்கருகில் கிடந்தது, கண்டு எடுத்தேன்" என்றார்.

ஐயரின் மனைவியார் சங்கிலியை அவசரமாகக் கையில் எடுத்து அதைப் பார்த்துக்கொண்டே, "நான் அப்போதே நினைத்தேன், குழந்தைகள்தாம் எங்கேயாவது கொண்டுபோய்ப் போட்டிருக்கலா மென்று" எனச்சொல்லி, மணியைப் பார்த்து, "மணி, நீ ஊருக்குப் போவதாகப் புறப்பட்டாயே, ஊருக்குப் போகவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, அவன் போகவில்லை. அடுத்தமாதம் போகப்போகிறானும்" என்றார் ஐயர்.

"நல்லதாயிற்று. அப்படியானல், போய் வேலையைப் பாரடா" என்ருர் அம்மையார்.

ஐயரும் அப்படியே சொன்னர். மணி பரம-சாதுபோல் வீட்டிற்குள் சென்று வேலை பார்த்து-வந்தான்.

அன்றுமுதல் அவனைப்போல் யோக்கியர் எவருமில்லை என்று சொல்லும்படி அவன் நடந்து-வந்தான். சில வருடங்களுக்குப் பிறகு அவன்-வாயினுலேயே இச் செய்தி சிலருக்குத் தெரிந்தது.

**கோவிந்தராகவையர் இரக்கமுள்ளவர் என்பதை விளக்குக.**

---

# 3. சொன்ன சொல் தவருதவர்

எவரும் 'சொல்வது எளிது; சொல்லியபடி நடப்பது அரிது.' அதனுல்தான் நாயனுர்,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணஞ் செயல்"

என்று கூறியுள்ளார். எத்தனையோபேர் பிறர்க்கு "அதைச் செய்கிறேன்; இதைச் செய்கி-றேன்" என்று வாக்குறுதி கொடுக்கின்றனர். பிறகு, சொல்லியவற்றில் பத்தில் ஒரு பங்குஞ் செய்-வதில்லை. அத்தகையவர்களை அவர்கள்பக்கத்தில் இருப்பவர்களும் மதிக்கமாட்டார்கள் என்ருல்,மற்ற வர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? எப்-பொழுதுமே யாரும் எவருக்கும் தங்களால் முடியாத வைகளை முடித்து வைப்பதாகச் சொல்லக்கூடாது.

சொன்னால், முடியக் கூடியவைகளையே சொல்ல வேண்டும். சொல்லிய பிறகு, சொல்லியவைகளைச் செய்தே தீரவேண்டும். சொன்னசொல் தவறாதவர்களை எல்லாரும் எப்போதும் கொண்டாடுவார்கள். அவர்கட்கு ஜனசமூகத்தில் ஒரு தனிமதிப்பு உண்டு.

இவ்வாறு, சொல்லிய வார்த்தையைக் காப்பாற்றி வாழ்ந்தவர்கள் நமது நாட்டில் எத்தனையோபேர் இருந்தனர். அவர்களுள் ஒருவரைப்பற்றி இங்கே எழுதுகிறேன்.

செங்கற்பட்டு ஜில்லாவில் மெய்ப்பேடு என்னுங் கிராமம் ஒன்று இருக்கிறது. அந்தக் கிராமத்தில் தொண்டைமண்டல முதலியார்வகுப்பில் பிறந்த அரியநாதர் என்பவர் ஒருவர் இருந்தார். பிற்காலத்தில் அவர் சிறந்த தளகர்த்தராய் விளங்கியபடியால் அவரை எல்லாரும் 'தளவாய் அரியநாத முதலியார்' என்று அருமையுடன் அழைக்கலாயினர். இப்போதும் அரியநாதரின் பரம்பரையினர் தளவாய் என்னும் பட்டத்துடன் திருநெல்வேலியில் வாழ்ந்துவருகின்றனர்.

அரியநாதர் நடுத்தர வாழ்க்கையை யுடைய குடும்பத்தில் பிறந்தவர். தாய்தந்தையர் அவரை அருமையுடன் வளர்த்துவந்தனர். அக்கால வழக்கப்படி அரியநாதர் தமிழோடு தெலுங்குமொழியையும் கற்றிருந்தார். மொழிகளில் வல்லவராய் இருந்ததுமட்டுமல்லாமல், கணக்கிலும் மிகுந்த அறிவு பெற்றிருந்தார். அக்காலத்தில் இளைஞர்கள் ஒவ்வொருவரும் பயிலுஞ் சிலம்பம், மல்யுத்தம், வாள்வீச்சு முதலியவைகளிலும் அரியநாதர் தேர்ந்திருந்தார்.

அரியநாதர் இளமைப் பருவத்தில் ஒருநாள் மாலைவேளையில் ஊருக்குப் புறத்தே இருந்த ஒரு வெளியிடத்தில் தம் நண்பர்களுடன் மல்யுத்தம் செய்துகொண்டிருந்தார். அவ்வழியே போனவர்கள் சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களுள் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் புரோகிதத்தொழிலுடன் கைரேகைகளைப் பார்த்துப் பலன்சொல்லுதலையும் மேற்கொண்டிருந்தார்.

மல்யுத்தம் முடிந்தது. நண்பர்கள் எல்லாருடனும் யுத்தம் செய்து அரியநாதரே வெற்றி பெற்றார். அதைக் கண்டிருந்த அனைவரும் அரியநாதரைப் புகழ்ந்தனர். புரோகிதர் புகழ்ந்ததுடன், அரியநாதரின் கைரேகைகளை ஆராய்ந்து ஆனந்தமடைந்து, அரியநாதரைப் பார்த்து, "தம்பி, உனக்கு நல்ல இராஜயோகம் வரப்போகின்றது. நீ இந்த ஊரிலே இருந்தால் அந்த யோகம் உனக்கு இன்னும் சில நிலங்களைத் தருவதுடன் தீர்ந்துவிடும். நீ விஜயநகரம் சென்றால், அரசரின் பழக்கம் ஏற்படும். அதனால், அளவற்ற நன்மை அடைவாய்" என்று கூறி, "போகிறாயா விஜயநகரத்திற்கு?" என்று கேட்டார்.

உடனே அரியநாதர் வணக்கத்துடன், "போகிறேன்" என்று பதில் சொன்னார்.

"நான் சொல்லியபடி உனக்கு இராஜயோகம் வந்தால், அப்போது நீ எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டார் புரோகிதர்.

"அப்போது என்னிடத்தில் உள்ள செல்வங்களுள் பாதியை நான் தங்களுக்குத் தருவேன்" என்றார் அரியநாதர்.

"நீ சொல்வதுமட்டும் போதாது. சொல்லியதைப்போல எழுதித் தா" என்று தம் கையில் இருந்த வெற்றோலையையும் எழுத்தாணியையும் புரோகிதர் அரியநாதரிடம் கொடுத்தார். அரியநாதர் அவ் வேட்டில், தாம் சொல்லியபடியே எழுதிக் கையெழுத்திட்டு, ஏட்டைப் புரோகிதரிடம் கொடுத்தார். புராகிதர் அதைப் பெற்றுக்கொண்டு, "நீ நாளைத்தினமே விஜயநகரம் செல்; நான் சொல்லியபடியே நீ எல்லா நன்மைகளையும் பெறுவாய்" என்று கூறிச் சென்றார்.

பிறகு அரியநாதர் தம் தாய்தந்தையர்களிடம் பிரியாவிடை பெற்று விஜயநகரம் சென்று அங்கு அரசாங்கத்தில் கணக்குவேலை பார்த்துவந்தார். நாளடைவில் அவருக்கு விஜயநகர அரசராகிய கிருஷ்ணதேவராயரின் தளகர்த்தர் நாகமநாயகர் என்பவரின் புதல்வராகிய விசுவநாத நாயகரின் நட்புக் கிடைத்தது. அரியநாதரும் விசுவநாதரும் சற்றேறக்குறைய ஒரே வயதினை யுடையவர்கள். விசுவநாதரின் விருப்பப்படி அரியநாதர் கணக்கு-வேலையை விட்டுப் போர்வீரராக மாறினார். அவருக்கு விருப்பமான வேலை அதுதான். அவர் போர்வீரராக மாறிய பிறகுதான் அவருக்குப் புரோகிதர் கூறிய இராஜயோகம் வந்தது.

அரியநாதரும் விசுவநாதரும் சிறுசிறு போர்கள் பலவற்றில் ஈடுபட்டு எல்லாப்போரிலும் வெற்றி பெற்றனர். அதனால் அரியநாதருக்கு அரசவையில் அமரும் பெருமை கிடைத்தது. அரியநாதர் அறிஞர், வீரர் என்பதை அரசர் உணர்ந்தார். பிறகு அரியநாதர் அரசரின் நன்மதிப்புக் குரியவராயினர்.

அக்காலத்தில் மதுரையில் பாண்டிய வமிசத்துக் கடைசிமன்னர் சுந்தரகுமாரன் என்பவர் மகப்பேறு இல்லாமல் இறந்துபோனர். அவர் இறந்தபிறகு பாண்டிய நாடு பெருங்குழப்பமடைந்தது. மக்கள் செய்வது அறியாமல் கலங்கினர். அதை அறிந்த கிருஷ்ணதேவராயர் அறிஞரும் வீரருமாகிய அரியநாதரையும், விசுவநாதரையும் பாண்டியநாட்டைப் பரிபாலிக்கும்படி அனுப்பினர். அரசருடைய கட்டளைப்படியே அரியநாதர் விசுவநாதருடன் மதுரைக்குச் சென்று விசுவநாதரை அரசராக்கி, எல்லா அரசகாரியங்களையும் தாமே நேரில் கவனித்து, பாண்டிய நாட்டைச் சீர்ப்படுத்தி, மக்கள் கவலை இன்றி வாழச் செய்தார்.

தமிழ்நாடு தமிழர்நாடாக இருப்பதற்கு அரியநாதர் தந்திரமாகவும், ஒழுங்காகவும் செய்த வேலைகள் பலப் பல. அப்படி அவர் செய்திராவிடில், இதுவரையில் தமிழ்நாடு தெலுங்கர்நாடாக மாறியிருக்கும். இந்த உண்மையை அறியமாட்டாத சிலர் 'அரியநாதர் தெலுங்கர்களைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்து விட்டார்' என்று குறைகூறுவர்.

அரியநாதர் பாண்டிய நாட்டை எழுபத்திரண்டு சிறு பிரிவுகளாகப் பிரித்து, அவைகள் ஒவ்வொன்றுக்கும் அரசியற்றிறமும் வீரமும் அமைந்த ஒவ்வொருவரைத் தலைவராக்கி, அவர்களுக்கு விசுவநாதரை அரசராக்கி, தாம் மந்திரியாயும் சேனபதியாயும் விளங்கினர். உண்மையிலேயே அவரைப்போன்ற அரசியல்அறிஞர் அக்காலத்தில் இல்லை; இக்காலத்திலும் பலர் இல்லை என்னலாம்.

அரியநாதரின் அறிவோடுகூடிய முயற்சியினால் பாண்டியநாடு அமைதி பெற்றுச் சிறப்படைந்தது. கலகம் செய்யக்கூடிய—செல்வாக்குப் படைத்த—அனைவருக்கும் நாட்டின் ஒவ்வொருபகுதி கிடைத்துவிட்டபடியால், எங்கும் அமைதி நிலவிற்று. விசுவநாதர் அரசராய் இருந்தபோதிலும், உண்மையில் அரசரைப்பார்க்கினும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தவர் அரியநாதரே.

அரியநாதரின் விருப்பப்படி அரசர் அடிக்கடி 'தர்பார்' நடத்துவார். அப்பொழுது எழுபத்திரண்டு பாளையப்பட்டின் தலைவர்களும் மதுரைக்கு வந்து, அரசருக்கும் அரியநாதருக்கும் மரியாதை செலுத்தி, தர்பாரில் கலந்து மகிழ்ந்து சிலநாள் தங்கி விருந்துண்டு செல்வார்கள். இப்படி அரியநாதர் எல்லாரையும் வசப்படுத்திப் பாண்டிய நாட்டைச் சிறப்புற நடத்திவந்தார்.

ஒருநாள் தர்பார் நடந்துகொண்டிருக்கின்றது. எழுபத்திரண்டு பாளையப்பட்டுத் தலைவர்களும் அவரவர்களுக்குரிய இடத்தில் அமர்ந்திருக்கின்றனர். பல பிரபுக்களும், அரசியலறிஞர்களும், வேறு பலரும் வெவ்வேறு இடங்களில் விளங்கியிருக்கின்றனர். எங்கும் சிறிதும் ஓசை இன்றி அமைதி குடிகொண்டிருந்தது. தளவாய் அரியநாதர் பாளையப்பட்டின் தலைவர்களுக்குப் பொதுவாகச் சில செய்தி சொல்வதற்காக அரசரின் பக்கத்தில் இருந்த தமது பீடத்திலிருந்து எழுந்தார்.

அப்போது தலைவிரிகோலத்துடன் காவற்காரர்களையும் தள்ளிக்கொண்டு ஒரு புரோகித-

குமாரன் அரியநாதர் இன்னர் என்பதை அறிந்து-கொண்டு அவரெதிரில் போய் நின்று, "தாங்கள்-தாமோ அரியநாதர்?" என்று கேட்டான்.

"ஆம்" என்று பதிலளித்தார் அரியநாதர்.

"இது தாங்கள் எழுதியதுதானே?" என்று கேட்டுக்கொண்டே, எழுதப்பட்ட ஓலைத்துண்-டொன்றை அவன் அரியநாதரிடம் கொடுத்தான்.

அந்த ஓலைத்துண்டில் உள்ள வாக்கியங்கள் இருபது ஆண்டுகளுக்குமுன்னல் மெய்ப்பேட்டில் தம்மால் எழுதப்பட்டவை என்பதை அறிந்த அரியநாதர், "ஆம்" என்று கூறிவிட்டு, "நீங்கள் யார்?" என்று அவனை நோக்கிக் கேட்டார்.

உடனே அந்தப் புரோகிதஇளைஞன் அரிய-நாதரை நோக்கி, "இந்த ஓலைத்துண்டு என் தந்தையாரின் மரப்பெட்டியில் இருந்தது. ஆதலின், இதை நீங்கள் என் தகப்பனருக்கு எழுதிக்கொடுத்-திருக்க வேண்டும். இவ்வளவுகாலம் நான் காசியில் சென்று சாஸ்திரம் படித்துக்கொண்டிருந்தேன். இரண்டு வருடங்களுக்குமுன்னல்தான் நான் வீடு வந்து சேர்ந்தேன். என் தந்தையார் சில மாதங்களுக்கு முன்னல் இறந்துபோனர். சென்ற நவராத்திரியன்று அவர்பெட்டியைப் பார்த்தேன். அதனுள் இந்த ஓலைத்துண்டு இருந்தது. தங்கள் பெயரின்கீழே மெய்ப்பேடு என்று ஊர்ப்பெயரும் எழுதியிருந்ததனல், தங்களைச் சுலபமாக விசாரித்-தறிய முடிந்தது" என்று சொன்னன்.

உடனே அரியநாதர் புன்சிரிப்புடன், "தங்கள் தகப்பனரின் தொழில் என்ன?" என்று கேட்டார்.

"என் தந்தையார் புரோகிதத்தொழில் செய்து வந்தார். அந்தத் தொழிலோடு கைரேகைகளைப் பார்த்துப் பலன் சொல்வதையும் தொழிலாகக் கொண்டிருந்தார்" என்றான் புரோகித இளைஞன்.

"சரி; இந்த ஓலையில் நான் எழுதியுள்ளபடியே, இப்போது எனக்குள்ள செல்வத்தில் பாதியைத் தருகிறேன், பெற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லி, அரியநாதர் அந்த இளைஞனை ஓர் பீடத்தில் அமரச்செய்து, தாமும் தம் இடத்தில் உட்கார்ந்தார்.

அவ்விளைஞன் அரியநாதரை நோக்கி, "ஐயா, தாங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. என்னைப்போன்ற ஏழையை இந்த இராஜசபையில் தங்களுக்குச் சமானமாக உட்காரவைத்ததே தங்கள் பெருமையைக் காட்டுகிறது. என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லியிருந்தால், என்னால் என்ன செய்ய முடியும்! எப்பொழுதோ என் தகப்பனுருக்கு எழுதிக்கொடுத்தபடி இப்போது நடக்க முன்வந்துள்ள தங்களை நான் தருமதேவதை என்றே நினைக்கிறேன். தங்களுக்கு இப்போது உள்ள செல்வத்தில் பாதியைத் தாங்கள் எனக்குக் கொடுக்க நினைப்பது நாயின் முதுகில் அம்பாரியைக் கட்டுவதுபோலாகும். இந்த ஓலைத்துண்டில் தாங்கள் என்ன எழுதியிருந்தாலும் சரி; அதைப் பற்றி நான் கேட்கவில்லை. தாங்கள் எழுதியபடியே கொடுப்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். என் ஆயுள்பரியந்தம் நாங்கள் சாப்பிடுவதற்கு வேண்டிய அளவு பொருள் கொடுத்தால் போதும்" என்று சொன்னான்.

"அப்படியே செய்கிறேன்" என்றார் அரியநாதர்.

செய்தி ஒன்றும் தெரியாமல் அரியநாதரையும் புரோகித இளைஞனையும் பார்த்துக்கொண்டிருந்த அரசர் விசுவநாதரையும் பாளையப்பட்டுக்களையும் நோக்கி, இருபது வருடங்களுக்குமுன்னால் மெய்ப்பேட்டுஊரில் தமக்கும் புரோகிதருக்கும் நடந்த ஒப்பந்தம் முதலிய செய்திகளை அரியநாதர் விவரமாகச் சொன்னார். அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட அரசரும் பாளையப்பட்டுக்காரரும் அரியநாதரின் வாக்குத் தவறாப் பெருந்தன்மையைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

பிறகு அரியநாதர் புரோகிதர்மகனுக்கு ஏராளமான செல்வங்களைக் கொடுத்து, தகுந்த பாதுகாப்புடன் அவனை அனுப்பினார். அவன் தளவாய் அரியநாதமுதலியாரைத் தன் மனமாரப் புகழ்ந்து, வாயார வாழ்த்திக்கொண்டு போனான்.

அரியநாதர் தம் நினைவு தவறாமல், தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றியமைக்காக மகிழ்ந்தார்.

**தளவாய் அரியநாத முதலியார் சிறந்த அரசியல்வாதி என்பதைத் தெரிவிக்க.**

---

# 4. பெருந்தன்மை

நமது தமிழ்நாடு பலவித நற்செயலுக்குப் பேர்போனது. பண்டைக்காலம்முதல் நமது நாட்டில் நற்செயல் புரிந்து வாழ்ந்தவர்கள் பலர். வீரமும் கொடையும் தமிழ்மக்களின் அடிப்படையான சிறப்புக்கள். பெருந்தன்மைக்குத் தமிழர்களை நிகர்த்தவர்கள் எவருமில்லை. தமிழர்கள் வந்தவர்களையெல்லாம் உபசரிக்குந் தன்மை வாய்ந்தவர்கள். அதனால், வருவது தீமையாயினும் அதற்காக அவர்கள் கவலைப்படுவது இல்லை. "தமிழர்களின் பண்பு தனிப்பட்டது. உயர்ந்தது!" என்று தமிழைக் கற்ற ஆங்கிலநாட்டவராகிய 'ரெவரண்டு ஜி. யு. போப்' கூறியுள்ளார்.

எக்காலத்திலும் தமிழர்கள் பெருந்தன்மைக்குப் பேர்போனவர்கள் என்பதற்கு உதாரணமாக இங்கே ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நாகப்பட்டினத்தில் இராமசாமிபிள்ளை என்னும் பெயரினையுடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பலாப்பழத்தை உவமை கூறலாம். அவரை முன்னால் அறியாதவர்கள் பேச்சினாலும் தோற்றத்தினாலும் அவர் ஒரு முருடர் என்றே நினைப்பார்கள். அவர்தோற்றத்திற்கும் பேச்சுக்கும் அவருள்ளம் மாறுபட்டது. அது நல்ல பலாச் சுளையைப்போல் இனியது. அந்த உள்ளத்தில் எப்போதும் கருணையே குடிகொண்டிருக்கும்.

பிள்ளையவர்கள் "ஏஷியாட்டிக் ஸ்டீம் நாவிகேஷன்" என்னும் பெயருள்ள ஒரு கப்பல்கம்பெனிக்கு நாகப்பட்டினத்தில் தலைமைச்செயலாளராய் (**Agent**) இருந்தார்கள். அதனாலும் பிற-

தொழில்களாலும் பிள்ளையவர்களுக்கு ஐயாயிரம்முதல் பத்தாயிரம் ரூபாய் வரையில் மாதந்தோறும் வருமானம் வந்தது. வருமானத்தில் பெரும்பகுதியைப் பிள்ளையவர்கள் பிறர்நன்மைக்காகவே செலவு செய்துவந்தார்கள். பிள்ளையவர்களின் உதவியை நாடிச் சென்றவர்கள் ஏமாற்றமடைந்ததில்லை.

ஊரில் யார் கலியாணம் செய்தாலும் அவர்கள் பெரும்பாலும் பிள்ளையவர்களின் வீட்டிலிருந்து ஏதாவது ஓர் உதவியைப் பெறுவார்கள். கலியாணத்திற்கு வேண்டிய நகைகள், வண்டி வாகனங்கள், தட்டுமுட்டுப் பொருள்கள் பிள்ளையவர்கள் வீட்டில் வேண்டிய வரையில் உண்டு. இவைகளுட் சிலவற்றையாவது கலியாணக்காரர்கள் இரவலாகப் பெறுவது வழக்கம்.

ஒருமுறை ஆரோக்கியசாமி என்னும் ஒரு கிறிஸ்தவர், நடுத்தரவாழ்க்கை நடத்துகிறவர், மேரியம்மை என்னும் பெயர் வாய்ந்த தம் மகளுக்குத் திருமணம் நடத்தினர். ஊர்வலம் வருவதற்காக அவர் இராமசாமிப்பிள்ளையவர்களின் இரண்டு குதிரை பூட்டும் புதிய 'கோச்சு' வண்டியை இரவலாகப் பெற்ருர். மணமக்கள் அந்த வண்டியில் அமர்ந்தனர். வண்டி புறப்பட்டது; ஊர்வலம் நடைபெறலாயிற்று. பாதிக்குமேல் ஊர்வலத்தின் தூரம் முடிவு பெற்றது. வண்டி ஓர் இடத்தில் வருகையில், ஊர் சுற்றும் நாய் ஒன்று யாராலோ துரத்தப்பட்டு வெருண்டு குதிரைகளின் நடுவில் சென்று குதித்து, அப்படியும் இப்படியுமாகப் பாய்ந்தது. உடனே குதிரைகள் வெருண்டு தாவ ஆரம்பித்தன. மிகத்

திறமையாக மணமக்கள் வண்டியிலிருந்து இறக்கப்பட்டார்கள். ஆயினும், குதிரைகள் வெருட்சியுற்றுத் தாவித் தாவிக்கொண்டே, வண்டியை வழிக்குப் பக்கத்தில் பள்ளத்தில் இழுத்துச் சென்றன. அப்போது வண்டியின் ஏர்க்கால், பக்கத்தில்இருந்த 'முனிசிபல்' இரும்புவிளக்குத் தூணில் பலமாக மோதியதனல், மடமட வென்று முறிந்தது. அதனல் ஊர்வலம் ஒருவாறு இரவு எட்டு மணிக்கே முடிவுற்றது. வண்டிக்கு நேர்ந்த பழுதை இராமசாமிப்பிள்ளையவர்கள் அன்றிரவே அறிந்துகொண்டார்கள்.

மறுநாட் காலையில் ஆறுமணிக்குப் பிள்ளையவர்கள் வழக்கம்போல் வீட்டின் முன்புறத் தாழ்வாரத்தில் பல் விளக்கிக் கொண்டிருக்கிருர்கள். வேலைக்காரன் ஒரு பெரிய வெள்ளிப்பாத்திரத்தில் பிள்ளையவர்கள் வாய் கொப்புளிப்பதற்காக, அளவான சூடுள்ள வெந்நீரை வைத்துக்கொண்டிருக்கிருன். அப்போது ஆரோக்கியசாமி அங்குவந்து பிள்ளையவர்களை வணங்கி அவர் எதிரில் நின்ருர்.

"எங்கு வந்தீர்?" என்று கேட்டார் பிள்ளை.

"தங்கள் வண்டி நேற்றிரவு பழுதாயிற்று" என்ருர் ஆரோக்கியசாமி.

"ஆமாம், அதற்கென்ன?"

"அதைப் பழுது பார்ப்பதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று தெரிந்துகொண்டு அவ்வளவு தொகையைச் சேகரித்துத் தங்களிடம் கொண்டுவந்து தரவேண்டும் என்பது என்கருத்து" என்ருர் ஆரோக்கியசாமி.

"அந்த வண்டியைப் பழுது பார்ப்பதற்கு உத்தேசமாக இவ்வளவு தொகை செலவாகலாம் என்று யாராவது உம்மிடம் சொல்லவில்லையா?" என்று கேட்டார் பிள்ளை."

"சொன்னார்கள்."

"எத்தனை ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள்?"

"எழுநூறு ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள்."

'நீர் உம் மகள் கலியாணத்திற்கு எத்தனை ரூபாய் செலவு செய்தீர்?"

"ஆயிரம் ரூபாய் செலவுசெய்தேன்.

"கையிலிருந்து ஆயிரரூபாய் செலவு செய்தீரா? கடன் வாங்கிச் செலவுசெய்தீரா?"

"பாதித் தொகை கையில் இருந்தது. பாதி கடன் வாங்கிச் செலவுசெய்தேன்."

"இப்பொழுது வண்டியைப் பழுது பார்ப்பதற்காக ரூபாய் எழுநூற்றுக்கு நீர் என்ன செய்வீர்?"

"கடன்தான் வாங்கவேண்டும்."

"அந்தக் தொகையைக் கடனாக வாங்குவது இலேசான காரியமா?"

"இலேசான காரியமில்லை. கலியாணத்திற்கு வாங்கிய கடனோடு இந்தக் கடனையும், முதலில் கடன்தந்தவரிடமே வாங்கி, இந்த இரண்டு-தொகைக்கும் ஈடாக நான் குடியிருக்கும் வீட்டை

அவரிடம் அடைமானம் வைத்து விடுவேன்" என்றார் ஆரோக்கியசாமி.

பிள்ளையவர்கள் சிறிது யோசித்தார்கள். பிறகு, தலையை அசைத்துக்கொண்டே புன்சிரிப்புக் கொண்டார்கள். பின்னர் அவர்கள் ஆரோக்கியசாமியை நோக்கி, "நீர் நல்ல மனிதர் ஐயா! பெண்ணுக்குக் கலியாணம் செய்யப்போய் வீட்டை அடைமானம் வைக்கப் போகிறீர்! அதுவும் எனக்குப் பணம் கொடுப்பதற்காக! வேடிக்கைதான். 'வீட்டை ஏன் அடைமானம் வைத்தீர்?' என்று யாராவது கேட்டால், 'இராமசாமிப் பிள்ளைக்குப்பணம் கொடுப்பதற்காக' என்றுதானே நீர் சொல்லவேண்டி வரும்; கலியாணத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவு; வண்டியைப் பழுதுபார்க்க எழுநூறு ரூபாய் செலவா! நன்றாய் இருக்கிறது நியாயம்! நான் சவாரி போகையில் அந்த வண்டி பழுதடைந்தால், அப்போது நான் யாரைப்போய் ரூபாய் கேட்கமுடியும்? நீர் ரூபாய் தரவேண்டாம். வீடு போய்ச் சேர்ந்து, கலியாணத்திற்கு யாரிடத்திலோ வாங்கியதாகச் சொல்லிய கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கு வழி தேடும். வண்டி ஒடிந்ததைப்பற்றி நீர் கொஞ்சமும் கவலைப்பட வேண்டா. அதுமட்டுமல்ல; இனி உமக்கு எப்போதாவது என் உதவி வேண்டுமானால் தயங்காமல் வரலாம். அப்போதும் என் உதவி உமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். நீர் போய் வரலாம்" என்று சொன்னார்.

ஆரோக்கியசாமி, பிள்ளையவர்களை வணங்கிவிட்டு, "தெய்வம் எங்கேயோ இருப்பதாகச் சொல்லுகிறார்களே! இப்படிப் பட்டவர்களல்-

லவோ கண்கண்ட தெய்வம்!" என்று நினைத்துக்கொண்டே தம் வீடு போய்ச் சேர்ந்தார்.

இப்படிப் பெருந்தன்மையான பல செயல்களைப் பிள்ளையவர்கள் செய்திருக்கின்றார்கள்.

---

# 5. திறமைக்குப் பதவி

தமிழ்நாட்டினர் திறமை மிக்கவர். அந்தத் திறமையானது பல துறைகளில் அவர்களிடத்தில் சிறந்து விளங்கியிருக்கிறது. வீரம், கொடை, மனவுறுதி முதலியவைகளில் அவர்கள் சிறந்து விளங்கியதைப்போலவே வேறு பல துறைகளிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். கல்வியறிவில் அவர்கள் எவருக்கும் பிற்பட்டவர்களல்லர். கண்டதையும், கேட்டதையும், படித்ததையும் மறக்காமல் நினைவில் வைத்திருந்து, வேண்டியபோது சொல்வதிலும் தமிழர்கள் வல்லவர்களாய் இருந்தார்கள். தமிர்களின் இத்தகைய திறமைக்கு உதாரணமாக, ஒரு நிகழ்ச்சியை இங்கே சொல்வோம்:

செங்கற்பட்டு ஜில்லாவில் வண்டலூர் என்பது ஒரு சிற்றூர். அந்த இடத்திலிருந்து திருப்போரூருக்குப் போகும் பாதைக்குப் பக்கத்தில், வேங்கடமங்கலம் என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது. அந்த ஊர் இன்று தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமாய் இருக்கிறது. ஆனால், வெகுகாலத்திற்கு முன்னர், அந்த ஊர், அப்போது அரசாட்சி

செய்துகொண்டிருந்த ஆர்க்காட்டு நவாபுக்கு உரியதாய் இருந்தது. அந்தக்காலத்தில், சற்றேறக்குறைய முந்நூறுவருடங்களுக்கு முன்னால், வேங்கடமங்கலத்தில் வீரபத்திர முதலியார் என்னும் இளைஞர் ஒருவர் இருந்தார். அவர் ஏழை. அவர்தாயாருக்கு அவர் ஒரே பிள்ளை. அவர் சிறுவராய் இருக்கும்போதே அவருடைய தந்தையார் இறந்துபோனார். ஆதலின், தாயும் மகனும் தங்களுடைய குடிலில் வசித்து வந்தார்கள். வீரபத்திரர் ஒரு கிராமக்கணக்கரிடம் வேலைபார்த்து, அவர் தரும் சிறிதளவு ஊதியத்தைக்கொண்டு தம் தாயாரோடு ஒருவாறு காலங் கழித்துவந்தார். அவர் இளம்வயசிலேயே எண்ணும் எழுத்தும் திண்மையுறக் கற்றிருந்தார். அவர், தாம் கற்பது மறவாமல் இருப்பதற்காகக் கற்குஞ் செய்திகளைப் பலமுறை திருத்தமாக நினைத்து நினைத்து மனத்தில் பதியும்படி செய்வார். இந்தப் பழக்கம், வரவர, அவர் எந்தச் செய்தியையும் ஒரு முறை நினைத்தவுடன் மனத்தில் நிலைபெறச் செய்வதற்குத் துணை செய்தது.

அந்தக் காலத்தில் செங்கற்பட்டு ஜில்லாவின் பெரும்பகுதி ஆர்க்காட்டு நவாபுக்குச் சொந்தமாய் இருந்தது. அந்த நவாபின் பிரதிநிதியாக ஒரு முகம்மதியர் செங்கற்பட்டில் ஒரு கோட்டையில் இருந்து செங்கற்பட்டு ஜில்லாவை ஆட்சி செய்துவந்தார். அவர் ஆர்க்காட்டு நவாபின் பிரதிநிதியாய் இருந்தபடியால், அவரை எல்லாரும் நவாப் என்றும், செங்கற்பட்டு நவாப் என்றும் வழங்கினர்.

வருடத்திற்கு ஒருமுறை செங்கற்பட்டு நவாப் வரிவசூல் சம்பந்தமாக ஒரு ‘தர்பார்’ நடத்துவார்

அதற்கு "ஜமாபந்தி" என்று பெயர். அந்த ஜமாபந்திக்கு ஜில்லாவில் உள்ள கிராமக் கணக்கப்பிள்ளைமாரும் மணியக்காரரும் வருவார்கள். ஒவ்வொரு கிராமத்தைப்பற்றியும் விசாரணை நடைபெறும். முக்கியமாக, நிலவரி வசூல் சம்பந்தமாக உள்ள கணக்குக்களை கணக்கப்பிள்ளைமார் நவாபுக்கு முன்னால் தரையில் மண்டியிட்டு வரிசையாகப் படித்து வருவர். சந்தேகத்தை நவாப் கேட்டுத் தெரிந்துகொள்ளுவார். நிலவரிவசூல் தலைவரும் நவாபின் பக்கத்தில் அமர்ந்திருப்பார். அவரும் சந்தேகத்தைக் கேட்டுத் தெளிவு பெறுவார்.

இத்தகைய ஜமாபந்தி ஒன்று வழக்கம்போல ஒருவருடம் நடைபெறுவதற்கு நாள் குறிப்பிடப் பட்டது. அந்த ஜமாபந்தியில் கலந்துகொள்ளுவதற்கு எல்லா ஊர் மணியக்காரர்களும் கணக்கப் பிள்ளைகளும் ஆயத்தமா யிருந்தார்கள். ஆனால், வேங்கடமங்கலத்துக் கணக்கப்பிள்ளை அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தார். என்னென்ன வைத்தியம் செய்தும் நோய் நீங்கினபாடில்லை. ஜமாபந்தி நடைபெறவிருக்குங் காலத்திற்குள் நோய் நீங்காதெனத் தெளிவாகத் தெரிந்தது. ஜமாபந்தியும் நெருங்கியது. இரண்டே நாட்கள்தாம் இடையில் இருந்தன. வேங்கடமங்கலம் மணியக்காரரோடு, இளைஞர் வீரபத்திரரைத் தமக்குப் பதிலாகக் கணக்குக்களைப் படிப்பதற்கு அனுப்பிவிடலாமென்று வேங்கடமங்கலம் கணக்கப்பிள்ளை தீர்மானித்தார். இந்தத் தீர்மானத்தை மணியக்காரர் முழுமனத்துடன் ஆமோதித்தார். பெருமையோடல்ல; தடுக்க முடியாத காரணத்தால் இளைஞர் வீரபத்திரரும் ஒப்புக்கொண்டார். ஏதோ சொந்தவேலையும் செங்கற்பட்டில் தமக்கு இருப்பதனால்

அன்றே தாம் செங்கற்பட்டுக்குப் புறப்படுவதாக மணியக்காரர் சொன்னார். தாமும் உடன் வருவ-தாக வீரபத்திரர் உரைத்தார். சாப்பாட்டை முடித்-துக்கொண்டு தம் வீட்டிற்கு வந்துவிடும்படி வீர-பத்திரரிடம் கூறிவிட்டு, கணக்கப்பிள்ளையினிடம் சொல்லிக்கொண்டு மணியக்காரர் தம் வீடுபோய்ச்-சேர்ந்தார்.

கணக்கப்பிள்ளையின் வீட்டிலிருந்து, பனை-யோலையில் எழுதப்பட்ட கணக்குக் கட்டை எடுத்துக்கொண்டு வீரபத்திரர் தம் வீடுபோய்ச் சேர்ந்தார். சேர்ந்தவர், கணக்குக் கட்டை வீட்டின் முன்புறத்துக் கூரையில் மூங்கில்-சட்டத்திற்கும் கூரைக்கும் இடையில் செருகிவிட்டு, குளித்து வர வெளியே போய்விட்டார். அப்-போது வீட்டின் முன்புறம் வந்த அவர் தாயார் வீரபத்திரர் செருகி வைத்திருந்த கணக்குக்-கட்டைக் கண்டார். உடனே அந்த அம்மையார், அதை யாரேனும் எடுத்துக்கொண்டு போய்விடப்-போகிறார்களென்று, வீட்டிற்குள் கொண்டுபோய்ப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்தார். அந்தக் கணக்-குக்கட்டைச் செருகியிருந்த இடத்திற்குப் பக்கத்-தில் வேறொரு பழைய கணக்குக்கட்டு செருகப்-பட்டிருந்தது. அகலத்திலும், நீளத்திலும், கனத்-திலும், நிறத்திலும் கணக்கப்பிள்ளை கொடுத்த கணக்குக்கட்டை அது ஒத்திருந்தது. ஆனால், அது பிரிந்து தொங்கிக்கொண்டிருந்த வீட்டின் கூரை-யினால் கொஞ்சம் மறைபட்டிருந்தது. ஆகலின், வயதான அம்மையார் அதைக் கவனிக்கவில்லை.

வீரபத்திரர் குளித்துவிட்டு வந்து சாப்பிட்டுக்-கொண்டிருந்தார். அப்போது, "மணியக்காரர்

கூப்பிடுகிறார்'' என்று ஒருவன் வந்து சொன்னான். அதனால், வீரபத்திரர் விரைவாகச் சாப்பிட்டு, வெளியில் செருகப்பட்டிருந்த வேறொரு கணக்குக்கட்டைத் தாம் செருகிய கணக்குக்கட்டென நினைத்து எடுத்து, அதைப் பார்க்காமலே ஒரு துணியில் சுற்றிக்கொண்டு மணியக்காரர்வீட்டுக்குப் போனார். மணியக்காரரும் வீரபத்திரரும் ஓர் இரட்டைமாட்டுவண்டியிலேறிச் செங்கற்பட்டுக்குப் பிரயாணமானார்கள்.

பகல் பதினொருமணி நேரத்தில், செங்கற்பட்டுக் கோட்டை ஒன்றில் ஜமாபந்தி நடைபெறுகின்றது. நவாப், நிலவரிவசூல் அதிகாரி, பல ஊர்களின் கணக்கப்பிள்ளைமார், மணியக்காரர், இன்னும் பல அதிகாரிகள் முதலியோர் சபையில் அவரவர்களுக் குரிய இடத்தில் அமர்ந்திருக்கின்றார்கள். அதற்குமுன் இரண்டு நாள் ஜமாபந்தி நடைபெற்றது. அன்று மூன்றாவது நாள். கூப்பிட்டவுடன் கணக்கப்பிள்ளைகள் ஒவ்வொருவராகச் சென்று, தங்கள் ஊர்க்கணக்கை நவாபுக்கு முன்னால் முழங்காலில் நின்று படித்துக்கொண்டிருந்தனர். பிறகு வேங்கடமங்கலத்தின் முறை வந்தது. "வேங்கடமங்கலம்! வேங்கடமங்கலம்!'' என்று கூப்பிடப்பட்டது,

வேங்கடமங்கலக் கணக்கப்பிள்ளையின் பிரதிநிதியாக வீரபத்திரர் சென்று முழங்காலில் நின்று ஒரு சிறு துணியை அவிழ்த்து அதற்குள்ளிருந்த கணக்குஏட்டை எடுத்தார். வீட்டில் கவனிக்காமலே கட்டிய கட்டை அதுவரையில் வீரபத்திரர் அவிழ்க்கவே இல்லை. கட்டை அவிழ்த்தவுடன் அதற்குள் இருந்தது சென்றவருடக் கணக்குஏடு

என்பதை வீரபத்திரர் அறிந்தார். அவர்மனத்தில் அச்சம் குடிகொண்டது. அப்பொழுதுதான் முதன்முதலாக ஜமாபந்திக்குக் கணக்கைப் படிப்பதற்காக வந்திருக்கின்றார். விஷயம் வெளியானல், என்ன தண்டனை கிடைக்குமோ என்று அவர் ஏங்கினர். தாமதம் செய்வதற்கோ, வேறுசிந்திப்பதற்கோ நேரமில்லை. அந்தக் கணக்குஏட்டின் அகலமும், நீளமும், பருமனும், தோற்றமும் தம்மை ஏமாற்றியதை அவர் அறிந்தார். தவறு நடந்துவிட்டது! இனி என் செய்வது! அவர்மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. அவருடைய ஞாபகசக்தியை அவர் நம்பினர். ஒரு விநாடி நினைத்தார். அந்த வருடம் படிக்க வேண்டிய கணக்கு முழுவதும் அவர்மனத்தில் தோன்றியது.

"தாமத மாகிறதே" என்ருர் நிலவரிவசூல்அதிகாரி.

"இதோ படிக்கிறேன்" என்ருர் வீரபத்திரர்.

பிறகு வீரபத்திரர் கணக்குஏட்டை அவிழ்த்து முழங்காலில் இருந்தபடியே, பார்ப்பவர்களும் படிப்பதைக் கேட்பவர்களும் ஐயம் உருதபடி கையில் இருக்கும் அந்தச் சுவடியைப் பார்த்துப் படிப்பதுபோல் பாவனை செய்துகொண்டு, தமது ஞாபகசக்தியினல் அந்த வருடத்துக் கணக்கை, வரிசையாகச் சொல்லிக்கொண்டே போனர். இவ்வாறு அவர் சொல்லிக்கொண்டு போகையில், தம் கையில் இருந்த அவ்வருடத்துக் கணக்குப்புஸ்தகத்தின் பிரதியொன்றை வரிவசூல் அதிகாரி பார்த்துக் கொண்டேவந்தார்.

வீரபத்திரர் சிறந்த ஞாபக சக்தி உள்ளவர்தாம். ஆனலும், அவர் சொல்லிக்கொண்டே

போகையில், இடை இடையே சற்றுத் தடுமாற்றம் ஏற்பட்டது. ஒருவருடத்துக் கணக்கை நினைவிலிருந்தே சொல்வதானல், யாருக்குத்தான் தடுமாற்றம் ஏற்படாது! தடுமாற்றம் ஏற்பட்டதே தவிர, சொல்லிய கணக்கில் பிழைஒன்றும் ஏற்படவில்லை.

இருந்தாலும் இடையிடையே வீரபத்திரருக்கு ஏற்பட்ட தடுமாற்றத்தைக் கண்ட நவாப் "உமக்குக் கண்பார்வை சரியாய் இல்லைபோலும்!" என்று வீரபத்திரரைப் பார்த்துச் சொல்லிவிட்டு, தம் அருகில் இருந்த தம் சொந்தக் கணக்கப் பிள்ளையைப் பார்த்து, வீரபத்திரர்கையில் இருந்த கணக்குப் புஸ்தகத்தை வாங்கிப் படிக்கும்படி சொன்னர். அந்தக் கணக்கப்பிள்ளை உடனே வீரபத்திரரின் அருகில் சென்று, அவர் கையில் இருந்த கணக்கு ஏடுகளைப் பெறுவதற்காகத் தமது கையை நீட்டினர். "கொடுத்தால் விஷயம் விளங்கிவிடுமே! விளங்கினல் நிலை துன்பத்திற்கிடமாகுமே!" என்று நினைத்து வீரபத்திரர் மயங்கினர்.

"கொடும்" என்று, சிறிது அதட்டலோடு நவாப் சொன்னர்.

வீரபத்திரர் நடுங்கிக்கொண்டே தமது கையில் இருந்த ஏடுகளை நவாபின் கணக்கப்பிள்ளையிடம் கொடுத்தார்.

நவாபின் கணக்கப்பிள்ளை ஏடுகளைக் கையில் எடுத்துப் பார்த்தார். உடனே அவர், அது வேறு சுவடி யென்றும் வீரபத்திரர் சொல்லிய கணக்கு

ஒன்றும் அதில் இல்லை என்றும் அறிந்தார். அதனால், அவர் என்ன செய்வதென்று தெரியாமல் வீரபத்திரரையும் நவாப்அவர்களையும் மாறிமாறிப் பார்த்தார்.

"என்ன, நீர்கூட விழிக்கிறீர்! உமக்கும் கண் தெரியவில்லையா?" என்றார் நவாப்.

கணக்கப்பிள்ளை மௌனமாயிருந்தார்.

சிறிது கோபத்துடன் நவாப் கணக்கப் பிள்ளையை நோக்கி, "ஏன் விழிக்கிறீர்? காரணம் என்ன?" என்று கேட்டார்.

உடனே கணக்கப்பிள்ளை நவாபை நோக்கி, "இது இந்த வருடத்தின் கணக்கேடு அன்று. எதையோ வைத்துக்கொண்டு வீரபத்திரர் எதையோ சொல்லுகிறார். இந்த ஏடுகளில் வீரபத்திரர் சொல்லிவந்த கணக்குகளே காணப்படவில்லை. இதில் வேறு கணக்குகள் இருக்கின்றன. இவை-களுக்கும் வீரபத்திரர் சொல்லியவைகளுக்கும் எவ்-விதப் பொருத்தமும் இல்லை" என்று சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் நவாப் ஆச்சரியப்பட்டு, தமது கணக்கப் பிள்ளையை நோக்கி. "என்ன ஐயா, நீர் சொல்வது ஆச்சரிய-மாய் இருக்கிறதே! வீரபத்திரர் இதுவரையில் இந்த வருடத்துக் கணக்கைத்தானே படித்துவந்-தார்!" என்று சொன்னார்.

"ஆம்" என்று நிலவரி அதிகாரி பதில் சொன்னார்.

“அப்படியானால், இந்த வருடத்துக் கணக்கு அந்த ஓலைகளில் இல்லை என்று சொல்லுகிறாரே நம் கணக்கப்பிள்ளை” என்றார் நவாப்.

“ஆம்,” என்றார் நவாபின் கணக்கப்பிள்ளை.

உடனே நவாப் வீரபத்திரரை நோக்கி, “என்ன ஐயா, எல்லாம் வேடிக்கையாய் இருக்கிறதே! நீர் படித்த கணக்கு உம் கையில் உள்ள ஓலையேடுகளில் இல்லையென்று நம் கணக்கப்பிள்ளை சொல்லுகிறார். ஆனால், நீர்படித்த கணக்கு இந்த வருடக் கணக்குத்தான் என்று நிலவரி அதிகாரி சொல்லுகிறார். இது ஆச்சரியமாய் இருக்கிறதே! உண்மை என்ன?” என்று கேட்டார்.

அதற்குமேல் மௌனமாய் இருந்தால் ஆபத்து விளையுமென்று வீரபத்திரர் அஞ்சி நவாபை நோக்கி, “துரையே, இந்த வருடக் கணக்குஏட்டின் பிரதி வீட்டில் இருக்கிறது. அதைப் போல் காணப்பட்ட இந்த ஓலைச்சுவடியை அவசரத்தில், இந்த வருடத்துக் கணக்குச்சுவடி என்று கருதி எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். இங்கு இதை அவிழ்த்தபிறகு விஷயம் தெரிந்தது. உண்மை தெரிந்தால் தாங்கள் என்ன செய்வீர்களோ என்று பயந்தேன்; ஆகலின், இந்த ஏட்டுச்சுவடியை வைத்துக்கொண்டே இந்த வருடத்துக்கணக்கை, என் நினைவில் இருந்தே சொல்லிக்கொண்டுவந்தேன். அதனால்தான் நான் சொல்வதில் இடை இடையே கொஞ்சம் தடைப்பட்டது. என் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டுகின்றேன்” என்று சொன்னார்.

இதைக் கேட்டவுடன் பலர் ஆச்சரியப்பட்டார்கள். சிலர் வீர பத்திரரை அவருடைய ஞாபக சக்திக்காகப் புகழ்ந்தார்கள்; வேறு சிலர் நவாப் என்ன செய்வாரோ என்று பயந்தார்கள்.

ஆனால் நவாப் வீரபத்திரரின் ஞாபகசக்தியை அறிந்து ஆச்சரியப்பட்டார். ஓர் ஊர்க்கணக்கு முழுவதும் ஞாபகத்தில் வைத்திருந்து சொல்வதென்றால் ஆச்சரிய மல்லவா!

நவாப் வீரபத்திரரை உற்று நோக்கினார். வீரபத்திரர் ஓர் அபூர்வமனிதராக நவாபுக்குத் தோன்றினார். உடனே நவாப் வீரபத்திரரை நோக்கி, "நீர் பாக்கியுள்ள இந்தவருடக்கணக்கு முழுவதையும் உமது ஞாபகசக்தியின் துணைகொண்டே சொல்வீரா?" என்று கேட்டார்.

"சொல்ல முடியும் என்று நினைக்கிறேன்" என்றார் வீரபத்திரர்.

"சொல்லும், கேட்போம்" என்றார் நவாப்.

பிறகு, வீரபத்திரர் மேற்கொண்டு அந்த வருடத்துக் கணக்கைச் சொல்லிக்கொண்டே போனார். நிலவரிவசூல் அதிகாரி தம்மிடத்தில் உள்ள அந்த வருடத்துக் கணக்குப்பிரதியைப் பார்த்து, "சரி, சரி" என்று கவனித்துக்கொண்டேவந்தார். நவாபும் மற்றவர்களும் வீரபத்திரர் சொல்லுவதை அக்கறையோடும் ஆச்சரியத்தோடும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாகக் கணக்குப் புத்தகத்தைப் பார்த்து ஒருவருடத்துக் கணக்கைப் படிப்பதற்கு எவ்வளவு நேரமாகுமோ அவ்வளவு நேரத்தில் அந்த வருடத்துக் கணக்கு முழுவதையும் வீரபத்தி-

ரர் சொல்லி முடித்தார். சொல்லும் பொழுது இடை இடையே கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டதைத் தவிர, கணக்கில் பிழை ஒன்றும் ஏற்படவில்லை.

ஒரு வருடத்துக் கணக்கைப் பிழையின்றிச் சொல்லியதைக் கேட்ட நவாபும் மற்றவர்களும் ஆச்சரிய மடைந்தாரகள். நவாப் எழுந்து வந்து வீரபத்திரரை அன்புடன் கட்டித்தழுவி அழைத்துக்கொண்டுபோய், தம் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, "வீரபத்திரரே, இவ்வளவு ஞாபகசக்தியுள்ள எவரையும் இதுவரையில் நான் கண்டதும் இல்லை; பிறர் சொல்லக் கேட்டதும் இல்லை. ஆயிரமாயிரம் பாட்டுக்களை ஒப்பிக்கலாம்; படித்த கதைகளைச் சொல்லலாம். ஒரு வருடத்திய கணக்கை, பார்க்காமல் சொல்லியவர்களை நான் கண்டதில்லை. நீரே புத்திசாலி. நீர் எந்தக்கணக்கருக்கும் மேலான கணக்கர். உம்மை மேன்மைப் படுத்த விரும்புகிறேன். நீரே, இனிமேல் இந்த ஜில்லாவிலுள்ள எல்லாக்கணக்கருக்கும் மேலான கணக்கராய் இருந்து, நிலவரிவசூல் செய்யும் விஷயத்திலும், ஜமாபந்தி நடத்தும் விஷயத்திலும் என்னுடன் இருந்து ஆகவேண்டியவைகளைச் செய்துவரவேண்டும். அதற்காக உமக்கு நான் வேங்கடமங்கலத்தையும் அதைச்சேர்ந்த நான்கு ஐந்து கிராமங்களையும் இனாமாகத் தந்துவிடுகிறேன். என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார்.

"தங்கள் விருப்பம்போலவே நான் நடக்கத் தயார்" என்று சொல்லிவிட்டு, எதிர்பாராத விதமாகத் தமக்கு வந்த நன்மைக்கு வீரபத்திரர் ஆச்சரியப்பட்டார்.

வீரபத்திரருக்கு நேர்ந்த நன்மையை அறிந்த பலர் மகிழ்ந்தனர்; சிலர் பொறாமை கொண்டனர்.

பின்னர் நடைபெற வேண்டியவைகளெல்லாம் தொடர்ந்துநடந்தன. அந்த வருடத்திய ஜமாபந்தி முடிவுற்றது.

பிறகு, நவாப் நிலவரிவசூல் விஷயத்திலும், ஜமாபந்தி நடத்தும் விஷயத்திலும் தம்முடைய பிரதிநிதியாக வீரபத்திரரை ஏற்படுத்தினுர்; எல்லாக் கணக்கருக்கும் மேலான கணக்கராக வீரபத்திரரை நியமித்தார்.

நவாபினுடைய மதிப்பையும் கிராமங்களையும் வீரபத்திரர் பெற்ற பிறகு, அறிவில்லாத மக்களும் அவரைக் கொண்டாடத் தலைப்பட்டார்கள்.

அறிவிற் சிறந்த வீரபத்திரர் பல நன்மைகளையும் நவாபின் நன்மதிப்பையும் பெற்றுர்.

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்புமன்றே?

---

# 6. தாலியையும் ஈந்தவர்

பிறவியிலேயே சிலர் குற்றஞ் செய்யுங் குணம் உள்ளவர்களாய் இருக்கின்றனர். பலர் கூட்டுறவினுலும் நிலைமை காரணமாகவும் குற்றவாளிகளாகின்றனர். பிறவியிலேயே குற்றம் செய்யுங் குணம் அமைந்தவர்களைத் திருத்துவது கடினந்-

தான். நிலைமை காரணமாகவும், கூட்டுறவு காரண மாகவும் குற்றம் செய்கிறவர்களை, தகுதியுள்ள பொதுமக்களும், ஆளுகின்றவர்களும் மனம் வைத்தால் திருத்திவிடலாம். பொதுவாக, வறுமை காரணமாகச் செய்யப்படுகின்ற குற்றங்களே அதிகம் என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆகலின், அரசாட்சி செய்கிறவர்களும் தகுதியுள்ள பெருமக்களும் வறுமையைப் போக்க வழி தேடவேண்டும். நாட்டில் மக்களிடையே காணப்படும் வறுமை, நோய் முதலியவைகளைப் போக்க வழி தேடாவிட்டால் பெரும்பான்மையோரான சாதாரணமக்களிடையில் குற்றம் பெருகாமல் இருக்க முடியுமா? குற்றம் செய்யும்படியான நிலைமையில் மக்களுள் சிலரை வைத்துவிட்டு, அவர்கள் குற்றம் செய்த பிறகு அவர்களைத் தண்டிப்பதனாலும் கண்டிப்பதனாலும் பணச்செலவும் காலச்செலவும் ஆவதைப் பலர் கவனிப்பதே இல்லை.

"நாகரிகம்" மிகுந்திருப்பதாகக் கூறப்படும் இந்நாளில் மக்களிடையில் காணப்படும் குற்றச்செயல்களைப்பார்க்கிலும் நம் முன்னோர்கள்காலத்தில் நாட்டில் குற்றச்செயல் குறைவாகத்தான் இருந்தது. இதற்குக் காரணம் பலவாகக் கூறப்பட்ட போதிலும், "மக்களின் தேவையும், வறுமையும் முற்காலத்தில் குறைவாக இருந்தன என்பதே முக்கியமான உண்மையாகும். அக்காலத்தில்—முக்கியமாகத் தமிழ்நாட்டில் மன்னர்களும், பிரபுக்களும் பிறரும் நாட்டின் வறுமையைப் போக்குவதிலேயே கருத்தாய் இருந்தார்கள். ஆளும் பதவியில் இருந்தவர்கள் தங்களை மக்க-

ளின் ஊழியர்களாகக் கருதினார்கள். ஏரி தன்னிடத்திலுள்ள நீரைப் பக்கத்திலுள்ள நிலங்களுக்குக் கொடுத்துதவுவதுபோல, முற்காலத்தில், பிரபுக்கள் தங்களிடமுள்ள பொருள்களைத் தங்களை நெருங்கியிருந்த ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து அவர்களை வறுமையிலிருந்து விடுதலை பெறச் செய்து, நல்லவர்களாய் வாழச் செய்தனர். முற்காலத்தில் மக்களிடையில் குற்றம் குறைவாக இருந்தமைக்கு இச்செயல் முதற்காரணமும் முக்கிய காரணமுமாகும். இதை விளக்க, யான் கேள்விப்பட்ட ஒரு நிகழ்ச்சியை இங்கே எழுதுகின்றேன்.

அணைக்குடி என்பது தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஓர் ஊர். அந்த ஊரில் சாமிநாத பிள்ளை என்னும் பெயருள்ள பிரபு ஒருவர் இருந்தார். தாராள குணத்திற்கும், அறச்செயலுக்கும் அவர் பெயர்போனவர். அவருக்கு அணைக்குடியும் வேறுசில கிராமங்களும் சொந்தமாய் இருந்தன. இன்றைக்கும் தஞ்சை ஜில்லாவில் உள்ள முதியோர்களுட் பலருக்கு அவரைப்பற்றிப் பல செய்திகள் தெரியும். அணைக்குடி சாமிநாத பிள்ளையின் முன்னோர்களுள் ஒருவர்பெயர் சட்டநாத பிள்ளை என்பது.

சட்டநாத பிள்ளை என்பவர் வாழ்க்கையிற் சிறந்த வேளாண்வாழ்க்கையை நடத்திவந்தார். அவர்காலத்தில் அவருக்கு அவ்வூர்நிலம் முழுவதும் சொந்தமாய் இல்லாவிட்டாலும் அணைக்குடியில் பலவேலிநிலங்கள் சொந்தமாய் இருந்தன.

சட்டநாத பிள்ளைகாலத்தில் அணைக்குடியில் அவரைப்பார்க்கிலும் சிறந்த கொடையாளியோ

நல்லவரோ வேறு ஒருவரும் இருந்ததில்லை. இரவு, பகல் எந்த நேரத்திலும் யார் வந்து எவ்வித உதவியை விரும்பினாலும் கூடிய வரையில் அவ்வித உதவியை அவர்களுக்குச் சட்டநாத பிள்ளை செய்தே அனுப்புவார். அதனால் பிள்ளையவர்களுக்கு, "ஏழை பங்காளர், வள்ளல்" என்பன போன்ற பெயர்கள் ஏற்பட்டன. மக்கள் எல்லாரும் 'அணைக்குடிப் பிள்ளை' என்று அவரைச் சொன்னார்களேயன்றி, சட்டநாத பிள்ளை என்று அவரைச் சொல்லியதே இல்லை.

பிள்ளையவர்கள்மனைவியும் மிக்க நல்லவர்; உபகாரகுணம் மிகுதியாக வாய்ந்தவர். அந்த அம்மையாரின் நல்ல குணமே பிள்ளையவர்களின் நல்ல குணத்தைப் பின்னும் அதிகப்படுத்தியது. பின்வரும் நிகழ்ச்சி கணவரும் மனைவியும் எவ்வளவு நல்லவர்கள் என்பதை விளக்கப் போதுமானது.

ஒருநாள் இரவு மணி பத்து இருக்கும். அணைக்குடிக் கிராமம் முழுவதும் ஒருவாறு அடங்கிவிட்டது. இரண்டொருவர்மட்டும் தெருக்கோடியில் புறத்திண்ணையில் அமர்ந்து அரைத்தூக்கத்துடன் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர். பிள்ளையவர்களும் பரந்துகிடந்த தமது வீட்டுப்புறத்திண்ணையிலிருந்து தம்முடன் பேசிக்கொண்டிருந்த நண்பர்கள் சென்றபிறகு தமது வீட்டிற்குள் சென்றார். பிறகு தெருக்கதவும் சார்த்தப்பெற்றது. அவ்வளவே!

அடுத்த விநாடியில் தெருக்கதவு மெதுவாகத் தட்டப்பட்ட ஓசை பிள்ளையவர்களின் காதிற்பட்டது.

"யார்?" என்று கேட்டுக்கொண்டே பிள்ளையவர்கள் தெருக்கதவைத் திறந்து வெளியில் வந்தார்கள்; எதிரில் நிற்பவர் பக்கத்து ஊர் நீலமேகம் பிள்ளை என்பதை அறிந்தார்கள். நீலமேகம் பிள்ளை ஒரு வேலிக் குடித்தனக்காரர்; உண்மை வாய்ந்த நல்ல மனிதர்.

அவரைக் கண்டவுடன், "என்ன நீலமேகம், இந்த நேரத்தில் எங்கு வந்தாய்? விடியற்காலையில் உன் மகனுக்குக் கலியாண மல்லவா? என்னைத்தான் உன் மைத்துனன் வந்து கூப்பிட்டானே. நீயும் எதற்காக வரவேண்டும்? நான் என்ன வாராமலா இருந்துவிடுவேன்? நான் பொழுது விடிய வந்து விடுகிறேன்; நீ போய் ஆகவேண்டிய வேலையைக் கவனி. எவ்வளவோ வேலை இருக்கும். இங்கு வந்து விட்டாயே!" என்றார் சட்டநாத பிள்ளை.

நீலமேகம் மௌனமாய் இருந்தார்.

'ஏதோ வேறு வியவகாரம்போ லிருக்கிறது' என்று உணர்ந்து கொண்ட பிள்ளையவர்கள் "ஏன் மயங்குகின்றாய்? வந்த காரணம் என்ன? சொல், நீலமேகம்" என்றார்கள்.

"ஒரு முக்கியமான சமாசாரம்" என்றார் நீலமேகம்.

"என்ன?" என்று கேட்டார் பிள்ளை.

"விடிந்தவுடன் கலியாணத்திற்கு வேண்டிய ஒரு முக்கியமான பொருள் இல்லை" என்றார் நீலமேகம்.

"என்ன பொருள்? எதைக் கேட்டாலும் தருகிறேன்".

"நீங்கள் தருவீர்கள். ஆனால், அது உங்களிடத்தில் இருக்குமோ என்னவோ!"

"என்ன வேண்டும் உனக்கு?"

"பக்கத்துஊர் பத்தரிடம் தாலி செய்யச் சொல்லிப் பொன் கொடுத்திருந்தேன். அவர் பலமுறை வரச்சொல்லி, கடைசியாக இன்று மாலையில் தருவதாகக் "கெடு" வைத்தார். இன்று காலையில் அவர் திடீரென்று மாரடைப்புநோயினால் இறந்து போனார். இதுவரையில் தாலி செய்யப்படவில்லை என்று தெரிந்தது. விடிந்தவுடன் கலியாணம். என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. உங்களை நினைத்துக்கொண்டேன்; ஓடிவந்தேன். நீங்கள் தயை செய்து உங்கள் ஊரில் உள்ள பத்தரிடம் தாலி செய்து தரச் சொல்லுங்கள். இந்த உதவி எனக்கு நீங்கள் செய்யும் பேருதவியாகும்."

"நீலமேகம், நீ கவலைப்படாதே. எங்கள் ஊர் பத்தர்வீட்டிலும் விடிந்தால் கலியாணம். ஆகலின், அவரை இப்பொழுது தாலி செய்து தரும்படி கேட்பது தகுதியல்ல. என் வீட்டில் ஒரு தாலி இருக்கின்றது. அது என் பாட்டியார் கட்டிக்கொண்டிருந்தது. என் பாட்டனார் எண்பது வயது வாழ்ந்தவர் என்பதையும், என் பாட்டியார் அவர் இறப்பதற்கு ஓர் ஆண்டுக்குமுன்னர்த்தான் இறந்தார் என்பதையும் நீ அறிவாய். என் பாட்டனார் என் பாட்டிக்குக் கட்டிய தாலியை நான் உன்னிடம் தருகிறேன். அதை நீ எடுத்துக்கொண்டுபோய்க் கலியாணத்தை நடத்து; மயங்காதே."

சட்டநாத பிள்ளை இப்படிச்சொல்லியதில் பாதிதான் உண்மை இருந்தது. தாலி அவருடைய

பாட்டியாருடையதுதான்; ஆனால், சட்டநாத பிள்ளையவர்களின் தகப்பனாரால் பழுதுபார்க்கப் பட்டு, சட்டநாத பிள்ளையவர்களின் மனைவி கழுத்-தில் அணியப்பட்டிருக்கின்றது.

கடைசியாகப் பிள்ளையவர்கள் கூறிய வார்த்-தையைக் கேட்டவுடன் நீலமேகம்பிள்ளை அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவே இல்லை. பாவம்! நடைபெறப் போவதை அவரால் அறிய முடியாதே! ஆதலால், அவர் பிள்ளையவர்களை நோக்கி, "உங்க-ளிடம் வருகிறவர்கள் வேண்டியதைப் பெறாமல் போவதில்லை என்பதை நான் அறிவேன். ஆகலின் நான் இங்கே வந்தேன். அந்த மகாராஜி, உங்கள் பாட்டி கட்டிக்கொண்டிருந்த தாலி என்றால் மிக்க மகிழ்ச்சிதான்" என்று சொன்னார்.

பிறகு பிள்ளையவர்கள் நீலமேகம்பிள்ளையைத் திண்ணையில் இருக்கச் செய்து வீட்டிற்குட்சென்று தமக்கும் நீலமேகம்பிள்ளைக்கும் நடந்த உரை-யாடலைத் தம் மனைவியாரிடம் சொன்னார். அவ்-வளவுதான்!

"கொண்டான் குறிப்பறிந்து நடக்கும் பெண்-டாட்டி" யாகிய அந்த அம்மையார் மறுவார்த்தை பேசாமல் ஒருநூற்சரட்டில் ஒரு மஞ்சளைக் கட்டி அதைத் தாலிக்குப் பதிலாகக் கழுத்தில் போட்டுக்-கொண்டு தம் கழுத்தில் பொன்சரட்டில் கோக்கப் பட்டிருந்த தாலியைப் பொன்சரட்டுடன் தம் கணவர்கையில் கொடுத்தார். பிள்ளையவர்கள் அதைப் புன்சிரிப்புடன் வாங்கிக்கொண்டு வெளி-யில் வந்து, திண்ணையின்மீது பரபரப்புடன் காத்-துக்கொண்டிருந்த நீலமேகம்பிள்ளையிடம் கொடுத்தார்கள்.

உண்மை உணராத நீலமேகம் பிள்ளை, அந்தத் தாலிச்சரட்டைச் சட்டநாத பிள்ளையவர்கள் பெட்டியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து கொடுத்ததாக நினைத்துக்கொண்டு அவருக்கு நன்றி கூறி, தக்க துணையுடன் தம் ஊர்போய்ச் சேர்ந்தார்.

பொழுது விடிந்தவுடன் வீட்டில் இருந்த பெண்கள் பிள்ளையவர்கள்மனைவியாரின் கழுத்தில் தாலிச்சரட்டுக்குப் பதிலாக மஞ்சள் முடியப்பட்ட நூற்சரடு இருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்து, அதற்குக் காரண மறிய முயற்சி செய்தனர்; முடியவில்லை. ஆனாலும் நீலமேகம், சட்டநாத பிள்ளையவர்கள் தமக்குச் செய்த உதவியை எல்லாரிடத்திலும் சொன்னதனால் சட்ட நாத பிள்ளையவர்களின் வீட்டில் இருந்த எல்லாருக்கும் விஷயம் விளங்கிவிட்டது. பிறகு இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவி, அப்பொழுது தஞ்சாவூரை அரசாட்சி செய்துகொண்டிருந்த அரசருக்கும் தெரிந்தது. பிள்ளையவர்கள் ஏழை எளியவர்களுக்குத் தேவையானபோது பலவித உதவிகளைச் செய்கிறார்கள் என்பதையும் அரசர் அறிந்தார்.

ஒரு வருடம் தஞ்சாவூர் ஜில்லாவில் காவிரியில் போதிய அளவு தண்ணீர் வரவில்லை. வியவசாயிகள் ஒருமுறைகூடப் பயிரிடவில்லை. அதனால் எங்குப் பார்த்தாலும் உணவுப்பஞ்சம் தலை தூக்கியது. ஏழைகள் துன்பப்பட்டனர். மற்றவர்களுட் பலர் அரைகுறையாகத்தான் உண்டுவந்தனர். சட்டநாத பிள்ளையைப் போன்ற சிலரிடந்தான் அதற்கு முந்திய இரண்டு வருடத்தில்

விளைந்த நெல்லில் பாதி இருப்பாய் இருந்தது. சட்டநாத பிள்ளையைத் தவிர, நெல்வைத்துக் கொண்டிருந்தவர்களுட் பலரும் தங்கள் நெருங்கிய உறவினருக்கே உதவிவந்தனர். சட்டநாத பிள்ளையோ தம்மிடம் இருந்த நெல்லைக் கருத்துடன் கவனித்து, உறவினருக்குமட்டுமல்லாமல், ஏழை எளியவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் காப்பாற்றிவந்தார்.

பத்துப்பேர் வழிப்போக்கர்கள், பஞ்சகாலத்தில், ஒருநாள் இரவு ஒன்பதுமணி நேரத்தில் அணைக்குடிக்கு வந்தார்கள். அவர்கள், "பசிக்கிறது; யாரேனும் கொஞ்சம் சோறு போடுங்கள்," என்று வீடு வீடாகக் கேட்டனர். அந்த ஊரிலேயே பலர் அரைவயிற்றுக்கே அன்று சாப்பிட்டிருக்கின்றனர். ஒரு சிலர் உதவக்கூடியவர்களாய் இருந்தும் அவர்களிடத்தில் அந்த நேரத்தில் உணவில்லை. அவர்கள் தங்களைச் சோறுகேட்ட பத்து வழிப்போக்கர்களுக்குச் சட்டநாத பிள்ளையின் வீட்டைக் காட்டி, அங்குப் போய்க் கேட்கச் சொன்னார்கள். ஆயினும் அந்த வழிப் போக்கர்கள் சட்டநாத பிள்ளையின் வீட்டிற்கு நேரேபோகாமல், வரிசையாக எல்லாவீட்டிலும் கேட்டு, எல்லாரும் 'இல்லை' என்ற பிறகே சட்டநாத பிள்ளையின் வீட்டிற்குச் சென்றனர்.

"நாங்கள் வெகுதூரத்திலிருந்து வருகிறோம். பசி காதை அடைக்கிறது. இரண்டு நாள் பட்டினி. இந்த வேளையில் எங்களுக்குச் சோறு கிடைக்கவில்லையானால், எங்களால் மூச்சுவிடவும் முடியாது" என்று பத்துப்பேரில் இருவர் திண்ணையின்மீது

அமர்ந்திருந்த சட்டநாத பிள்ளையினிடம் சொன்ஞர்கள்.

அப்பொழுதுதான் கடைசியாக இருந்த சோற்றை யாரோ ஒருவருக்குப் போட்டுவிட்டுச் சமையற்காரன் பாத்திரத்தைக் கழுவிக் கவிழ்த்துவிட்டு வீட்டிற்குப் போஞன்.

ஆகலின், "இந்தப் பத்துப்பேர்பசியைப் போக்குவது எப்படி?" என்று பிள்ளையவர்கள் யோசித்தார்கள். பிறகு அவர்கள் பத்துப்பேரையும் உட்காரச் சொல்லிவிட்டு வீட்டிற்குட் சென்று மகாபுண்ணியவதியாகிய தம் மனைவியாரிடம், "இந்தப் பத்துப்பேர்பசியைப் போக்க வழி உண்டோ?" என்று கேட்டார்.

"உண்டு வழி. அவர்களைச் சற்றுநேரம் இருக்கச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, அந்த அம்மையார், வீட்டில் இருந்த இரண்டொரு பெண்களின் உதவியுடன் சோறும், குழம்பும், இரண்டு பதார்த்தங்களும் சுவைபடச் செய்து அந்தப்பத்துப் பேருக்கும் அவர்கள்மனம் களிக்கும்வண்ணம் இட்டு, அவர்கள்பசியைப் போக்கிஞர்.

பசி தீர்ந்தவுடன் அந்தப் பத்துப்பேரும் அந்த வீட்டின் தெருத்திண்ணையின் மீதே படுத்துக்கொண்டு நன்ருக உறங்கலாயினர்.

பொழுது விடியும் நேரத்தில் தெருக்கதவைத் திறந்துகொண்டு பிள்ளையவர்கள் வெளியே வந்தார்கள். திண்ணையின் மீது படுத்துக்கொண்டிருந்தவர்களைக் காணவில்லை. "யாரோ வழிப்போக்கர்கள் வந்தார்கள்; போஞர்கள்" என்று பிள்ளையவர்கள் எண்ணிக்கொண்டார்கள். நான்கு நாட்கள்

சென்றன. தஞ்சை அரசரிடமிருந்து பிள்ளையவர்களுக்கு, "அடுத்த வெள்ளிக்கிழமை காலையில் நான் சிலருடன் தங்கள் வீட்டிற்குத் தங்கள் விருந்தாளியாக வருகிறேன்" என்று எழுதப்பட்டு அரசருடைய கையெழுத்தோடு கூடிய கடிதமொன்று வந்தது. பிள்ளையவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு அரசரை வரவேற்பதற்குரிய ஏற்பாடுகள் ஒழுங்காக நடைபெற்றன.

குறிப்பிட்ட நேரத்தில், அரசரும் அவருடன் வேறு ஒன்பது அதிகாரிகளும் வேலைக்காரர்கள் பலரும் சட்டநாதபிள்ளையவர்களின் இல்லத்தில் வந்து சேர்ந்தார்கள். சட்டநாதபிள்ளை, அவர்களை வரவேற்று, அவரவர்கள் தகுதிக்கேற்ப வணக்கம் செலுத்தி, அவர்களுக்காக ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருந்த இல்லத்தில் அவர்களைத் தங்கச் செய்தார். அரசர் வருகையை அறிந்த பொதுமக்கள் பலர் அணைக்குடிக்கு வந்தவண்ணமாய் இருந்தனர்.

பலவித உபசாரங்களுக்குப் பிறகு பகல் விருந்து மிக்க சிறப்பாக நடைபெற்றது. விருந்து முடிந்தவுடன் அரசர் உல்லாசமாக ஓரிடத்தில் அமர்ந்தார். ஆடல் பாடல்கள் அரசரை மகிழ்விக்க நடைபெற்றன.

எல்லாம் முடிந்த பிறகு, அரசர் சட்டநாத பிள்ளையை அழைத்து, தம்மோடிருந்த ஒன்பது பிரபுக்களைக் காட்டி, "இவர்களையும் என்னையும் இதற்கு முன் ஒருங்கே எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"பிரபுக்களும் அரசரும் சேர்ந்து பத்துப்பேர்; இவர்களை எங்கே பார்த்தோம்! எங்கே பார்த்தோம்! தெரியவில்லை. அன்றிரவு வந்த பிச்சைக்காரர்கள் பத்துப்பேர்! அவர்களா இவர்கள்? அப்படி இருக்க முடியுமா? நினைக்கமுடியுமா? வெளியிலே சொன்னால் தலை போய்விடாதா!" என்றெல்லாம் பிள்ளையவர்கள் நினைத்தார்கள்.

கடைசியில் சட்டநாத பிள்ளை அரசரை நோக்கி, "தங்களையும் இவர்களையும் இதற்கு முன் ஒருசேர எங்கும் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்" என்றார்.

"பார்க்கவில்லையா?"

"ஆம்."

'கவனித்துப் பாரும்."

"எனக்கு ஒன்றும் தெரியவில்லை."

"சில தினங்களுக்கு முன்னால், இரவில், நீங்கள் பத்துப்பிச்சைக்காரர்களுக்கு உங்கள் மனைவியைச் சமைக்கச் சொல்லிச் சோறு போடவில்லையா?"

"ஆம்."

"அந்தப் பிச்சைக்காரர்கள் தாம் நாங்கள்."

இவ்வாறு அரசர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவர்களுட் பலர், சட்டநாத பிள்ளை உட்பட, "என்ன, என்ன! அரசரா! இந்தப் பிரபுக்களா பிச்சைக்காரர்கள்! ஏன் இவர்கள் பிச்சைக்காரர்களாய் வரவேண்டும்? ஊர்நிலைமை அறியவா? என்ன கருணை! நம் அரசர் தங்கமானவர்! இவரைச் சேர்ந்தவர்களும் அப்படியே!" என்று எண்ணி எண்ணி ஆச்சரிய முற்றனர்.

அப்போது அரசர் சட்டநாத பிள்ளையை நோக்கி, "பிள்ளையவர்களே. நான் உங்களுடைய ஏழைக்குதவுந் தன்மையையும் நற்செயலையும் பற்றிப் பலமுறை கேள்விப்பட்டேன். அதை நேரில் காணவே அன்றிரவு இந்தப் பிரபுக்களோடு பிச்சைக்காரனைப்போல் வந்து சென்றேன். உங்கள் இரக்கமுள்ள மனம் சிறந்தது. உங்களைப்போன்றவர்கள் என்னுடைய அரசாட்சியில் இருப்பது எனக்கு எவ்வளவோ பெருமகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் நீங்கள், இப்படியே கதியற்றவர்களுக்கு உதவி செய்துகொண்டிருங்கள். உங்களைப் போன்றவர்களால்தான் கதியற்றவர்கள் வழிதவறிப் போகாமல் காப்பாற்றப்படுகின்றனர். இன்றேல், அவர்கள் கள்வர்களாகவும் மோசக்காரர்களாகவும் மாறிவிடுவார்கள். மாறினல் நாடு கெடும். உங்களைப் போன்றவர்களே நாட்டுநலத்துக்கு உதவும் நல்லறிஞர்கள். நீங்களும் உங்கள் சந்ததியினரும் இப்படியே பலவித நற்பணிகளைச் செய்துவருவதற்காக இந்த அணைக்குடிக் கிராமத்தையும் இன்னும் பத்துக் கிராமங்களையும் உங்களுக்குச் சொந்தமாக்குகின்றேன். இக்கிராமங்களிலிருந்து வரக்கூடிய நிலவரிப் பணத்தைக்கொண்டு நீங்கள் எல்லாருக்கும் இப்போது செய்துகொண்டிருப்பதைப்போலவே உதவி செய்துகொண்டிருங்கள். உங்களுக்கு நான் தரும் கிராமத்தைப்பற்றி எழுதி அனுப்புகிறேன். உங்கள் நல்ல செய்கையே என்னை இங்கு வரச் செய்தது" என்று சொன்னர்.

கேட்டவர்க ளெல்லாரும் ஆச்சரிய மடைந்தனர். சட்டநாதபிள்ளை அரசரை நோக்கி,

"அடியேன் செய்துகொண்டிருக்கும் அற்ப நன்மையைப் பெரிதெனக் கருதிய தங்கள் பெருந்தன்மையை அளவிடமுடியாது. என் செயலோ சிறு செயல். அதைப் பெருஞ்செயலாகக் கொண்டமைக்குக் காரணம் தங்கள் பெருங்குணமேயாகும். இந்த ஏழையின் வீட்டிற்கு வந்து இந்த ஏழையைப் பெருமைப் படுத்திய தங்கள் பெருஞ்செயலுக்கு இந்த ஏழை என்ன கைம்மாறு செய்யப்போகின்றது!" என்று பலவாறு தமது அடக்கமும் அரசரின் உயர்வும் தோன்றும்படி பேசினர்.

பிறகு அரசர் சட்டநாத பிள்ளையினிடத்திலும் மற்றவர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்தார்.

சில தினங்கள் சென்றன. அரசர், தாம் சொல்லியவாறே அணைக்குடியையும் வேறு சில கிராமங்களையும் சட்டநாத பிள்ளைக்குச் சொந்த மாக்கி, அதைக் குறிக்குஞ் சாசன மொன்றையும் எழுதி, அதைச் சட்டநாத பிள்ளைக்கு அனுப்பிவைத்தார்.

பிள்ளையவர்கள் தமக்கு அரசரால் அளிக்கப்பட்ட நிலங்களின் வரும்படியைக் கொண்டு பின்னும் சிறப்பாகத் தம் அறச்செயலை ஆற்றிவந்தார்கள். அவர் வாழந்திருந்த இடத்தில் களவும் தீமைக்குரிய பிறவும் தலைகாட்டாது ஒழிந்தன.

இவ்வாறு அந்தக் காலத்தில் அரசரும் பிறரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டு உதவிசெய்துவந்ததனல் நாடு நல்லநாடாய் விளங்கியது.

## 7. களமூர், வீரவல்லி அரங்கநாத சாஸ்திரியார்

நமது நாட்டில் தங்களுடைய இடையறுவுழைப்பினாலும், அறிவினாலும் உயர்வடைந்த பெரியோர்களுள் களமூர் வீரவல்லி அரங்கநாத சாஸ்திரியாரும் ஒருவராவர். அவருடைய தந்தையாருக்குக் கொஞ்சம் விளைநிலம் இருந்தது. அது சரியாக ஏற்றபடி விளையாது. எப்போதாவது ஒருமுறை விளையும். அந்த விளைச்சலும் வாழ்க்கையை நடத்தப் போதுமானதாய் இராது. ஆகலின், அரங்கநாத சாஸ்திரியார் மிக்க ஏழ்மைத்தன்மை வாய்ந்த குடும்பத்தில் பிறந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

எக்குடியில் எந்த நிலையில் பிறந்தாலென்ன! அறிவும் முயற்சியும் உள்ளவர்கள் முன்னேற்றமடைகிறார்கள். அவை இல்லாதவர்கள் தாழ்வடைகிறார்கள்.

அரங்கநாத சாஸ்திரியார் மிக்க ஏழ்மைத்தன்மை வாய்ந்த குடும்பத்தில் பிறந்தார் என்பது உண்மையே. ஆனால், அவர் கல்வியில் சிறந்தவர்; முயற்சியில் ஒப்பற்றவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர் என்பதை அவர்காலத்தில் இருந்தவர்களுட் பலரும், இக்காலத்தில் கற்றவர்களுட் சிலரும் அறிவார்கள்.

அரங்கநாத சாஸ்திரியாரவர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, இந்துஸ்தானி, பெர்ஷியன், அரபி, சம்ஸ்கிருதம், லத்தீன், கிரீக், பிரெஞ்சு, ஜர்மன் முதலிய மொழிகளைப் பேசவும் எழுதவும் கற்றிருந்தார். ஹீப்ரு

மொழியையும் அவர் ஓரளவுக்கு அறிந்திருந்தார் என்று சொல்லப்படுகிறது.

முதலில் ஆசிரியத் தொழிலையும், பின்னர், சித்தூர் உதவிநீதிபதியின் காரியாலயத்தில் தலைமை-யெழுத்தாளர் வேலையையும் பார்த்து, பிறகு படிப்-படியாக உயர்ந்து சென்னை 'ஸ்மால்காஸ் கோர்ட்' நீதிபதிவேலையைப் பார்த்துவந்தார். அவர்காலத்தில் அவரைப்போன்ற கல்வியாளர் வேறு எவரும் இருந்ததில்லை. சென்னையில் முதன்முதல் கால்-சட்டை தரித்து உலவியவர் அவர்தாம்! சென்னை, "ஸமால்காஸ் கோர்ட்" டில் முதல்இந்-திய நீதிபதியாய் இருந்தவரும் அவர்தாம். முதன்-முதல் சென்னைச் சர்வகலாசாலைச்சங்கத்தில் இந்-திய அங்கத்தினராய் இருந்தவரும் அவர்தாம். இன்னும் பல பதவிகளில் இந்தியர்களுள் முதல்வ-ராய் இருந்தவர் அவரே.

அரங்கநாத சாஸ்திரியாரைப்பற்றி அக்காலத்-தில் ஒருவர்பின் ஒருவராய்ச் சென்னையில் கவர்ன-ராய் இருந்த ஐரோப்பியர்கள் ஒவ்வொருவரும் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள். கவர்னர்கள் மட்டுமன்று; உயர்தர நீதிமன்றத்து நியாயாதிபதி-களும், ஜார்ஜ் நார்ட்டன் போன்ற முதல்தரமான நியாயவாதிகளும் அரங்கநாத சாஸ்திரியாரின் பெருமையைப்பற்றிப் புகழ்ந்து கூறியிருக்கின்-றார்கள்.

"தம்முடைய அதிதீவிர அறிவினாலும் சலியா உழைப்பினாலும் அரங்கநாத சாஸ்திரியார் சர்வ-கலாசாலையின் அங்கத்தினராய் இருந்து தம் நாட்டு-மக்களுக்கு உழைத்துவருகின்றார்" என்று ஜார்ஜ் நார்ட்டன் ஒரு சமயத்தில் சொல்லியிருக்கின்றார்.

இத்தகைய அறிஞராகிய அரங்கநாதசாஸ்திரியார் தம் இளம்பருவத்தில் செய்த அரிய செயல் ஒன்று உண்டு. அதைச் சொல்வதற்காகவே அவரைப்பற்றி நாம் இவ்வளவு எழுதினோம். அவர் செய்த அச் செயலே அவர் உயர்வதற்கு முதற்படியாய் இருந்தது. அதை இனி எங்கு எழுதுவோம்.

## 1. விளையும் பயிர் முளையிலே தெரியும்

அரங்கநாத சாஸ்திரியாரின் தகப்பனருக்குப் பயிரிடுவதற் கேற்ற நல்ல நிலங்க ளில்லாமையால் அவர், அரசாங்கத்தாரின் வசமிருக்கும் நிலங்களில் சிலவற்றை அடிக்கடி குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு சிலரைத் துணைசேர்த்துப் பயிர்செய்வார்; ஏதோ அரைவயிற்றுக்குக் கிடைப்பதைக்கொண்டு காலந்தள்ளிவருவர்.

இப்படி அரங்கநாத சாஸ்திரியாரின் தந்தையார் வாழ்க்கை நடத்தி வருகையில், ஒருமுறை அவர் குத்தகைக்கு வைத்துக்கொண்ட நிலம் விளையவில்லை. கடன் வாங்கியே அவர் உழவுக்காகவும் விதைக்காகவும் செலவிட்டார். அந்தத்தொகையைக்கூட, கடன்கொடுத்தவர்களுக்கு அவர் திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றிருந்தார். அந்நிலையில் அவரால் அரசாங்கத்தினருக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த முடியவில்லை. ஆகலின், அவர் நீதிபதியின்முன் அழைத்துக்கொண்டுபோய் நிறுத்தப்பட்டார். நீதிபதி அவர் குத்தகைத்தொகையைக் கட்டாததற்குக் காரணம் கேட்டார். அரங்கநாத சாஸ்திரியாரின் தகப்பனர் காரணத்தை விளக்கமாகச் சொன்னர். இருந்தாலும், நீதிபதி அந்தக்கால

வழக்கப்படி கடன்காரர் இருக்கவேண்டிய சிறைச்சாலையில் அவரை இருக்கும்படி தீர்ப்புச் செய்து விட்டார்! அரங்கநாத சாஸ்திரியாரின் தந்தையார் அழுதுகொண்டேபோய், கடன்காரர் இருக்க வேண்டிய சிறைச்சாலையில் இருந்தார்.

அரங்கநாத சாஸ்திரியாரின் தாயார், தங் கணவர் கடன்காரர்சிறையில் சேர்க்கப்பட்டார் என்னுஞ் செய்தியை அறிந்தவுடன் அடைந்த துன்பத்துக்கு அளவே இல்லை. என்ன செய்வதென்றே அந்த அம்மையாருக்குத் தோன்றவில்லை. கடனைத் தீர்க்கவோ கையில் காலணவும் இல்லை. அப்போது அரங்கநாத சாஸ்திரியாருக்கு வயது பன்னிரண்டுதான். அவர் எங்கேயாவது சென்று யாராவது இட்ட வேலை செய்து, "ஐயோ பாவம்" என்று அவர்கள் கொடுத்ததை வாங்கிக்கொண்டு வருவார். அதைக் கொண்டு தாயும் தனயனும் காலங்கடத்தினார்கள். ஒன்றும் கிடைக்காதபோது தாயும் மகனும் பட்டினிதான்! "ஏன் இப்படித் துன்பப்படுகிறீர்கள் ?" என்று கேட்பார் யாரும் இல்லை. இல்லாரை எல்லாரும் இகழ்வதைத் தவிர ஏற்பது இல்லையே !

இப்படித் தாயும் சேயும் நெருப்பில்இருந்து துடிப்போரைப்போலத் துன்புற்றுக் காலந் தள்ளிவந்தார்கள். அப்போது ஒருநாள், அரங்கநாத சாஸ்திரியாரின் தாயார், வீட்டில் ஒருமூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார். தாயாரின் துன்பத்தைக் காணச் சகியாத தனயன் தாயின் அருகிற் சென்று, "அம்மா, ஏன் அழுகிறீர்கள்? அப்பா இன்னும் சிலமாதங்களுக்குள் சிறையிலிருந்து வந்துவிடுவார். இதற்கிடையில் நாம் செய்யக்

கூடியது என்ன இருக்கிறது? நமக்கு ஆறுதல் சொல்வார் ஒருவரு மில்லையே. நாம்தானே ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்! அம்மா, நீங்கள் அழுவதைப் பார்க்கும்போது என்மனம் உருகுகின்றது!'' என்று சொன்னார்.

தம் அருமருந்தன்ன மகன் சொல்லிய இனிய மொழிகளைக் கேட்ட தாயார் அழுவதை நிறுத்தி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தம் மகனை நோக்கி, "கண்ணே, உன் தந்தையார் சிறையில் இருப்பதை எண்ணும்போது என்மனம் உருகுவது உண்மைதான். ஆனால், இன்று நான் அழுதமைக்குக் காரணம் வேறு ஒன்று இருக்கிறது. உன் பாட்டனாருக்கு—உன் அப்பாவின் அப்பாவுக்கு—நாளை மறுதினம் திவசம் வருகிறது. அதை இருந்து நடத்த வேண்டியவர் உன் தந்தையார். உன் தந்தையார் உன்பாட்டனாரின் திவசத்தை நடத்தாமல் தவறவிட்டதே இல்லை. நாளை மறுதினம் வரும் உன் பாட்டனாரின்திவசத்தைத் தாம் வீட்டிலிருந்து நடத்த முடியாமையை எண்ணி உன் தந்தையார் நிச்சயமாகச் சிறைச்சாலையில் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பார். இதற்கு என்ன செய்வது என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இதை நினைக்கும்போது என் மனத்தில் தோன்றிய துன்பம் அடக்க முடியாதபடி பொங்கி எழுந்தது. அதனால் அழுதேன்'' என்று சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்ட அரங்கநாதர் பெரிதும் மனம் வருந்தினார்; "என்ன செய்யலாம்'' என்று சிந்தித்தார்; எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினார். கடைசியில் அவர்மனத்தில் நல்ல-

தோர் எண்ணம் தோன்றியது. உடனே அவர் தம் தாயாரை நோக்கி, "அம்மா, நாம் ஒருவரைப் பார்த்து ஒருவர் அழுதுகொண்டிருப்பதனல் ஆவது ஒன்றுமில்லை; நமக்கு உதவக்கூடியவர்களும் ஒருவருமில்லை. என் மனத்தில் ஒரு யோசனை தோன்றுகிறது. அவரையும் இவரையும் நாம் துணைதேடுவதை விட்டு, 'சாட்சிக்காரன்காலில் விழுவதைப்பார்க்கிலும் சண்டைக்காரன்காலில் விழுவது மேல்' என்றபடி, நேரே சித்தூருக்குச் சென்று தைரியமாக நேரில் ஜில்லாநீதிபதியாகிய "கஸமேஜர்" துரையினிடம் விஷயத்தைச் சொல்லுகிறேன். பிறகு நடப்பது நடக்கட்டும். சும்மா இங்கே இருப்பதைப்பார்க்கிலும் இந்த முயற்சியையேனும் செய்யலா மென்று நினைக்கிறேன். நீங்கள்மட்டும் தடைசொல்லாமல் என்னை அனுப்புங்கள்" என்று சொன்னர்.

தம் அருமைமகனைத் தனியே அனுப்புவதற்குத் தாயாருக்கு விருப்பமில்லை. ஆயினும் என்ன செய்வது! நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து அந்த அம்மையார் தம் மகனைச் சித்தூருக்கு அனுப்பினர்.

அரங்கநாதர் நடந்தே சித்தூருக்குச் சென்றார். அங்கு அவர் ஜில்லாநீதிபதி கஸமேஜர் இருக்குமிடத்தை விசாரித்து அறிந்துகொண்டார். பிறகு அவர் ஜில்லாநீதிபதியை, தூசு படிந்த உடம்பு, புழுதி படிந்த உடை, வாடிய முகம், அழுகின்ற கண் இவைகளுடன் சென்று கண்டார். அரங்கநாதரின் தோற்றத்தையும் அழுகையையும் கண்டவுடன் கஸமேஜரின் மனத்தில் இரக்கந் தோன்றியது.

உடனே ஜில்லா நீதிபதி கஸமேஜர் அரங்கநாதருக்குச் சமாதானம் சொல்லி அவர் அழுகையை நிறுத்தி அவரை நோக்கி, "நீ யாரப்பா, எங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? நீ ஏன் அழுகின்றாய்?" என்று சில கேள்விகளைக் கேட்டார்.

உடனே அரங்கநாதர் சுருக்கமாகவும், விளக்கமாகவும், இரக்கம் தோன்றும்படியாகவும், தாம் சென்ற நோக்கத்தைப்பற்றிச் சொன்னார்.

விஷயத்தை அறிந்த கஸமேஜர் அரங்கநாதரைப் பார்த்து, "சிறுவனே, உன் தைரியத்துக்காகவும், உன் தாயாரிடத்திலும் தந்தையிடத்திலும் நீ கொண்டிருக்கும் அன்பிற்காகவும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்; உன் விருப்பத்தை நிறைவேற்றவும் சித்தமாய் இருக்கிறேன். ஆனாலும், உன் தந்தையார், செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்தவுடன் மறுபடியும் சிறைச்சாலைக்கு வந்து சேரவேண்டும். இவ்வளவுதூரம் உன் பரிதாபத்தைக் கண்டு நான் உனக்கு உதவிசெய்யத் துணிகின்றேன். ஆனால், வீட்டிற்குச் சென்றபிறகு உன் தந்தையார் தாமே திரும்பிவருவார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா? அவர் திரும்பி வருவாரென்பதற்கு எனக்கு ஏதேனும் ஒரு பொறுப்பு வேண்டும்" என்று சொன்னார்.

உடனே அரங்கநாதர், கண்கலக்கத்துடன் அவரைப் பார்த்து, "தரித்திரம் பிடித்தவர்களாகிய எங்களால் என்ன பொறுப்பைக் காட்டமுடியும்! எங்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கு யார் வரப்போகின்றார்கள்! அவ்வளவு செல்வாக்கு

எங்களுக்கு இருக்குமானல், இப்போது என் தகப்பனர் சிறையில் இருக்கவேண்டிய அவசியமே நேர்ந்திருக்காதே! நாங்கள் ஏழைகள்; ஆனல், ஒழுங்கு தவருதவர்கள். என் தகப்பனர் கட்டாயம் திரும்பி வருவார். உங்களுக்கு என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையானல், என் தந்தை திரும்பி வரும் வரையில் நான் அவருக்குப் பதிலாகச் சிறையில் இருக்கிறேன். உங்களுக்குச் சம்மதமானல் அவரை விடுதலை செய்துவிடுங்கள். அவருக்குப் பதிலாக எவ்வளவு காலம் வேண்டுமானலும் நான் சிறையில் இருக்கிறேன்" என்று சொன்னர்.

"என் தந்தைக்குப் பதிலாக நான் சிறையில் இருக்கிறேன்" என்று அரங்கநாதர் கூறிய வார்த்தை நீதிபதியின் மனத்தில் நன்ருகப் பாய்ந்தது. அஃது அவர்மனத்தை உருக்கியது.

உடனே அவர் அரங்கநாதரைப் பார்த்து, "அரங்கநாத, உன்னைப்போன்ற பிள்ளைகள்தாம் உலகத்தில் கோடிக்கணக்கில் தோன்ற வேண்டும். உன் தகப்பனரிடத்தில் நீ கொண்டுள்ள அன்பு சிறந்தது. உன்னுடைய நல்ல குணத்திற்காகவும், நல்லறிவிற்காகவும் உன் தந்தையாரை நான் நிரந்தரமாக விடுதலை செய்கிறேன். நீ மட்டும் இன்னும் இரண்டு நாள் கழித்து வந்து என்னைப் பார்" என்று சொன்னர்.

பின்னர் நீதிபதி, அரங்கநாதரின் தந்தையாரை நிரந்தரமாக விடுதலைசெய்து விடும்படி சிறைச்சாலை அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதி அதை அரங்கநாதரிடமே கொடுத்து, "இதைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலை அதிகாரியினிடம் கொடு. அவர் உன்

தந்தையாரை விடுதலை செய்துவிடுவார்" என்று சொல்லி, அவருக்குத் துணையாக ஒரு சேவகனையும் அனுப்பினார்.

அரங்கநாதர் விரைந்து சென்று சிறைச்சாலை-அதிகாரியினிடம் நீதிபதியின் கடிதத்தைக் கொடுத்தார். அவ்வளவுதான்! கடிதத்தைப் படித்த-வுடனே சிறைச்சாலைஅதிகாரி அரங்கநாதரின் தந்தையாரை விடுதலை செய்து அரங்கநாதரின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தினார்.

நடந்த விஷயத்தை மகன் சொல்லக் கேட்ட தந்தையார் மகனை அப்படியே தழுவிக்கொண்டு ஆனந்த பரவசரானார். பிறகு, தந்தையும் மகனும் அளவில்லாத மகிழ்ச்சியுடன் தங்கள் வீட்டை அடைந்தார்கள். "மகன் வெற்றியுடன் திரும்பு-வானோ! கணவர் வருவாரோ!" என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருந்த அம்மை-யார் தம் கணவரும் மகனும் தங் கண்ணெதிரில் வந்து நிற்பதைக் கண்டவுடன் அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். பிறகு தாயாரும் தந்தை-யாரும் அரங்கநாதரின்மீது கொண்ட அன்புக்கு அளவே இல்லை.

திவசம் முடிந்தவுடன், மறுநாள், அரங்கநாதர் நீதிபதியைச் சென்று கண்டார். நீதிபதி அரங்க-நாதரை அளவில்லாத அன்புடன் வரவேற்று உப-சரித்து அவரைப் பார்த்து, "நீ சிறந்த புத்திசாலி-என்று எனக்குத் தோன்றுகிறது. நீ பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்தால் எதிர்காலத்தில் மிக உயர்ந்த நிலைமைக்கு வருவாய் என்பது திண்ணம். நீ ஏழை என்பதைப்பற்றிக் கவலைப்படாதே.

நானே உன் கல்விச்செலவு, உணவு உடை முதலிய செலவு இவைகளைக் கவனித்துக்கொள்ளுகிறேன். இதற்காகத்தான் அன்று என்னை மறுபடியும் வந்து பார்க்கும்படி நான் உன்னிடம்சொன்னேன். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

"எனக்குப் படிப்பதற்கு விருப்பமே. ஆனாலும் நான் என் தாய் தந்தையர்களின் விருப்பத்தை அறியவேண்டும். அறிந்து, நான் நாளைவந்து மறுபடியும் தங்களைப் பார்க்கிறேன்'' என்று சொன்னார்.

தாய் தந்தையரின் விருப்பப்படியே எந்த விஷயத்திலும் நடக்க விரும்பும் அரங்கநாதரின் அருங்குணத்தைக் கண்டு பின்னும் அவரிடம் அதிக விருப்பம் கொண்ட நீதிபதி, "உன் விருப்பப் படியே நீ நாளை வந்து உன் அபிப்பிராயத்தைச் சொல்லலாம்'' என்று சொன்னார்.

அரங்கநாதர் சென்று நீதிபதி சொல்லிய செய்தியைத் தம் தாய்தந்தையர்களிடம் சொன்னார். அவர்கள் அரங்கநாதர் கல்விகற்பது தங்களுக்கும் விருப்பந்தானென்று ஆனந்தத்துடன் சொன்னார்கள். மறுநாள் அரங்கநாதர் நீதிபதியாகிய கஸமேஜர் அவர்களிடம் சென்று தம் தாய்தந்தையரின் கருத்தைச் சொன்னார்.

பிறகு நீதிபதியின் ஆதரவில் அரங்கநாத சாஸ்திரியார் கல்விகற்று, நாம் ஆரம்பத்தில் சொல்லியபடி பல பதவிகளைப் பெற்றார். அறிவுள்ளவர்களும், முயற்சி உள்ளவர்களும், தாய் தந்தையர்களிடம் பற்றுள்ளவர்களும் உலகத்தில் உயர்வது உண்மை அல்லவா?

## 2. நியாயமும் உபகாரமும்

களமூர் வீரவல்லி அரங்கநாத சாஸ்திரியார் எப்போதும் ஒழுங்கு தவறி நடக்கமாட்டார். தாம் பேசும்போது ஒருவார்த்தையைத் தவருகப் பேசி-விட்டாலும் அதை எண்ணி எண்ணிப் பலநாள் வருந்துவார். பிறரிடம் பழகும்போதும் பேசும்-போதும் அவ்வரவர்களின் நிலைமைக்குத் தகுந்தபடி பழகுவார்; பேசுவார். ஆகலின், அவரை எல்லோ-ரும் "நல்லவர்" என்று பாராட்டினுர்கள். ஆனல், தவருக நடக்கிறவர்களைத் திருத்தாமல் விடமாட்-டார். தவறு செய்கிறவர்களை அவரவர்களுடைய நிலைக்கு ஏற்றபடி திருத்தவேண்டும் என்பது அவர்-கொள்கை. "வாயினல் ஒரு வார்த்தையைக் கடின-மாகச் சொன்னலே சிலர் திருந்திவிடுவார்கள். அநேகர் போதுமான துன்பத்தை அனுபவித்தா-லல்லது திருந்தமாட்டார்கள். ஆகலின், தண்டனை என்பது அவரவர்கள்நிலைமைக்கு ஏற்றபடி இருத்-தல் வேண்டும்" என்று அரங்கநாத சாஸ்திரியார் அடிக்கடி சொல்வது வழக்கம். இப்படியாக அவர், அவரவர்களின் நிலைமைக்கு ஏற்றபடியே எந்தக் காரியத்திலும் நடந்துவந்தார். தமக்கொரு நியா-யம், பிறருக்கொரு நியாயம் என்பது அவரிடத்தில் இல்லை. "எல்லாருக்கும் நியாயம் பொதுவானது. அந்த நியாயத்தைக்கொண்டே ஒவ்வொருவரையும் அவரவர்கள் நிலைமைக்கேற்றபடி, தவறினல், திருத்தவேண்டும் என்பது அவர்கருத்து. ஆகலின், தவறு செய்கிறவர்கள் அவரிடமிருந்து தப்ப முடி-யாது.

அரங்கநாத சாஸ்திரியார் சென்னை "ஸ்மால் காஸ் கோர்ட்" நீதிபதியாய் இருந்தபோது, ஒரு-

நாள் அவர்மனைவியார் கழற்றிவைத்திருந்த வைர-மோதிரம் ஒன்று மாயமாய் மறைந்துவிட்டது. வீட்டார் அனைவரும் அதை வீட்டில் எல்லா இடங்களிலும் தேடினார்கள். அது அகப்படவே இல்லை. பிறகு, "அது எங்கேயோ தொலைந்தே போய்-விட்டது" என்று தீர்மானித்து, எல்லாரும் அதை மறந்துவிட்டார்கள்.

இரண்டு மாதங்கள் சென்றன. ஒரு நாட் காலையில் வீட்டின் முற்புறத்துத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து சாஸ்திரியார் எதையோ படித்துக்-கொண்டிருந்தார். அப்போது இரண்டு சேவகர்-கள், அன்றைக்கு முதல்நாள் ஊருக்குப்போய் வருவதாக விடுமுறை பெற்றுச் சென்ற வெங்கப் பையன் என்னும் பெயருள்ள சமையற்காரனோடு அவர்முன்னே சென்று நின்றார்கள். தம் வீட்டுச் சமையற்காரனுடன் சேவகர்கள் நிற்பதைக் கண்டு சாஸ்திரியார் அதிசயித்தார்.

உடனே சேவகர்களுள் ஒருவன் சாஸ்திரியாரின் வீட்டில் காணமற் போன வைரமோதிரத்தை அவ-ரிடம் கொடுத்து, வெங்கப்பனைச் சுட்டி, "இவர் இந்த மோதிரத்தைக் கடைத்தெருவில் விற்க முயன்றபோது சந்தேகித்து இவரைப் பிடித்து விவரமறிந்து இங்கே கொண்டுவந்தோம். இனி உங்கள்விருப்பம்போல் நடக்கக் காத்துக்கொண்-டிருக்கிறோம்" என்று சொன்னன்.

உடனே சாஸ்திரியார், அவர்களை நோக்கி, "இவன் என்வீட்டுச் சமையற்காரனாய் இருந்திரா விட்டால் என்ன செய்வீர்களோ அதையே இப்-பொழுது செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு எழுந்து வீட்டிற்குள் போய்விட்டார்.

வெங்கப்பையனைச் சேவகர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். இரண்டு தினங்களுக்குப் பிறகு வெங்கப்பையன் "மாஜிஸ்ட்ரேட்"டினால் விசாரிக்கப்பட்டு ஆறு-மாதச் சிறைத்தண்டனையைப் பெற்றான். வைர-மோதிரம் சாஸ்திரியாரிடம் அனுப்பப்பட்டது.

வெங்கப்பையன் குடும்பம் மிக்க ஏழ்மை-நிலையிலிருந்தது. அதைச் சாஸ்திரியார் அறிவார். அதனால் அவர், வெங்கப்பையனுக்குக் கொடுத்து-வந்த சம்பளத்தை அவன்குடும்பத்தாருக்கு மாத-மாதம் தவறாமல் கொடுத்துவந்தார்.

ஆறுமாதம் ஆயிற்று. வெங்கப்பையன் விடு-தலை அடைந்தவுடன் அவனை நேரே தம்மிடம் கொண்டு வருமாறு சாஸ்திரியார் ஏற்பாடு செய்து வைத்திருந்தார். அவ்வேற்பாட்டின் படியே வெங்கப்பையன் விடுதலை பெற்றவுடன் சாஸ்திரி-யார்முன்னே கொண்டுவரப்பட்டான்.

உடனே சாஸ்திரியார் தனிமையில், வெங்கப்-பையன் திருடிய வைரமோதிரத்தை அவன்கையில் கொடுத்து, "இதை நீ எடுத்துக்கொள். நீ விரும்பிய பொருள் என்னிடத்தில் இருக்கக்கூடாது. உனக்கு விருப்பமானால், முன்போலவே இங்கு வேலை செய்" என்று சொன்னார்.

தான் செய்த தவற்றையும் தான் இல்லாத காலத்தில் சாஸ்திரியார் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த பெருந்தன்மையையும் அறிந்த வெங்கப்பையன் தான் செய்த குற்றத்தை உணர்ந்து மனம் வருந்தினான். உண்மையிலேயே அவன் திருந்திவிட்டான் என்பதை உணர்ந்த சாஸ்-

திரியார் அவனுக்குத் தேறுதல் சொல்லி, இட்ட-வேலையைச் செய்யும் ஆளாகத் தம்மிடத்தில் வைத்-துக்கொண்டார். வைரமோதிரம் வெங்கப்பைய-னிடமே இருந்தது. அதைப் பார்க்கும்போதெல்-லாம் வெங்கப்பையன்மனம் வருந்தித் திருந்தியது. ஆகலின், சாஸ்திரியாரின் காலத்திற்குப் பிறகும் அவர்குடும்பத்தில் வெங்கப்பையன் விசுவாசமுள்ள வேலைக்காரனாய் இருந்தான்.

# 8. சர். தி. முத்துசாமி ஐயர்

நல்ல அறிவும், அடக்கமும், முயற்சியும் இளம்-பருவத்திலேயே இருக்கவேண்டும் என்று நினைத்து, அதற்கு உரிய வழியில் உழைப்பவர்களே பிற்-காலத்தில் சிறந்து விளங்குவார்கள். இவ்வாறு இளம்பருவமுதற்கொண்டே அறிவும், அடக்க-மும், முயற்சியும் உள்ளவர்களாயிருந்து பிற்-காலத்தில் சிறந்து விளங்கிய பெரியோர்கள் பலர் நமது நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுள் சர். தி. முத்துசாமி ஐயரும் ஒருவராவர்.

ஐயரவர்களின் வரலாற்றில் சில நல்ல செய்தி-கள் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

**1. ஞாபகசக்தி**

முத்துசாமி ஐயரவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூருக்குப் பக்கத்தில் இருக்கும் உச்சுவாடி என்னுங்கிராமத்தில் நல்லவர்களாகிய தாய் தந்தை-

யருக்குப் புத்திரராய்ப் பிறந்தார்கள். இளமையிலேயே அவருடைய தகப்பனார் இறந்துபோனதனால் அவர், தம் தாயாரின் ஆதரவிலிருந்து, திருவாரூரில் ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் சிலவகுப்புக்கள்வரையில் படித்தார். அப்போது குடும்பம் இருந்த நிலையில் அவரால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை. ஆகலின், ஐயரவர்கள் தமது படிப்பை நிறுத்திக்கொண்டு, ஒரு கிராமக்கணக்கப்பிள்ளையினிடம் மாதம் ஒரு ரூபாய் சம்பளம் பெற்றுக் கணக்குவேலை பார்த்துவந்தார். அவர், வயதில் சிறியவராய் இருந்தாலும் அறிவில் பெரியவராய் இருந்தார்.

அக்காலத்தில் திருவாரூரில் முத்துசாமி நாயகர் என்னும் பெயருள்ள நல்லார் ஒருவர் தாசில்தாராய் இருந்தார். அவர் எப்போதும் கிராமவாசிகளுக்கு நன்மை செய்வதிலேயே நாட்டம் உள்ளவர்; ஏழைக்குடியானவர்களிடத்தில் இரக்கம் உள்ளவர்; பொதுவாக எல்லாரிடத்திலும் அவர் அன்பு செலுத்துவார். அதனால் எல்லோரும் முத்துசாமிநாயகரை மிக்கநல்லவரென்று எப்போதும் கொண்டாடினார்கள்.

அந்த முத்துசாமிநாயகரிடம் நம் முத்துசாமிஐயர் கணக்கப்பிள்ளையுடன் அடிக்கடி போய் வருவார். இளைஞராகிய முத்துசாமிஐயர் புத்திசாலி என்று எப்படியோ முதலிலேயே முத்துசாமி நாயகருக்குத் தெரிந்தது. அதனால், அவர் முத்துசாமிஐயரிடம் மிக்க அன்பு பாராட்டினார். சிறுவராகிய முத்துசாமிஐயரும் தமக்கு ஒழிந்த வேளைகளில் தாசில்தாரிடம் சென்று வேலையில் பழகிக்கொண்டிருந்தார்.

ஒருநாள் ஒரு மிராசுதார், அதிக நிலங்களை உடையவர், தாசில்தார் முத்துசாமிநாயகரைப் பார்க்க வந்தார்; அப்போது இளைஞராகிய முத்து சாமி ஐயரும் அங்கே இருந்தார்.

வந்த மிராசுதார் முத்துசாமி ஐயர் கணக்கு-வேலை பார்க்கும் கிராமத்தைச் சேர்ந்தவர். ஆக-லின், முத்துசாமி ஐயருக்கும் அந்த மிராசுதாரைத் தெரியும்.

மிராசுதார் வந்தவுடன், அவரை முன்னரே அறிந்தவரான தாசில்தார் அவரை வரவேற்று, ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னார்.

தாசில்தார் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்த மிராசுதார், "என்னுடைய நிலங்களுக்கு இந்த வருடம் நான் எவ்வளவு பணம் 'வாய்தா' கட்ட வேண்டுமென்று தெரியவில்லை. கணக்கப்பிள்ளை ஊரில் இல்லை; உங்களிடம் சொல்லிக்கொண்டு-தான் ஊருக்குப் போய்இருக்கிறாராம். நான் கட்ட வேண்டிய தொகை இவ்வளவு என்று தெரிந்தால் இப்பொழுதே அதைத் தங்களிடம் கட்டிவிட்டுப் போய்விடுவேன்" என்று சொன்னார்.

முத்துசாமி நாயகர் தமது அருகில் இருந்த முத்துசாமி ஐயரைப் பார்த்தார். உடனே முத்து-சாமி ஐயர் அந்த மிராசுதாரைச் சுட்டி, "இவர்கள் தங்களுடைய நிலங்களின் வாய்தாவுக்காக எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

"கணக்கைப் பார்த்துத்தானே சொல்ல முடி-யும்! இவர்கள்நிலம் கொஞ்சமல்லவே! கணக்-கைப் பார்க்கும்போதுகூடக் குறிப்பெடுத்துக்-

கொள்ளாவிட்டால் தொகை மறந்துவிடுமே! நீ எப்படி எல்லாவற்றையும் உன் நினைவினலேயே சொல்லிவிடுவாய்?'' என்று கேட்டார் தாசில்தார்.

''என்னல் முடியும். இவர்கள், தங்களுடைய நிலங்களுக்காகக் கட்டவேண்டிய பாக்கி முழுவதும் என் நினைவில் இருக்கிறது'' என்றார் ஐயர்.

''அப்படியானல் இவர்களுடைய பாக்கி எவ்வளவு? சொல், பார்க்கலாம்'' என்று கேட்டார் தாசில்தார்.

உடனே முத்துசாமி ஐயர், ''இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து ரூபாய், எட்டணு, ஒன்பது பை'' என்று தயங்காமல் சொன்னர்.

''ஏறக்குறைய அவ்வளவு இருக்கலாம். நான் இந்தப் பிள்ளையாண்டான் சொல்லிய தொகையை உங்களிடம் கட்டிவிட்டுப் போய்விடுகிறேன். அதிகமாய் இருக்கும் தொகையைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். நான் இன்னும் கொடுக்க வேண்டியதாய் இருந்தாலும் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினல் அவ்வளவையும் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்'' என்று சொல்லி, அந்த மிராசுதார் தம் கைப்பெட்டியிலிருந்து ஐயர் சொன்ன தொகையை எடுத்துத் தாசில்தாரிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டு, போய்விட்டார்.

மறுநாள் தாசில்தார் கணக்கை வருவித்துப் பார்த்தார். கொஞ்சமும் கூடுதல்குறைதல் இல்லாமல் முத்துசாமி ஐயர் சொல்லிய கணக்குச் சரியாய் இருந்தது. அதைக் கண்ட தாசில்தார் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவர், முத்து-

சாமி ஐயரின் முதுகில் தட்டிக்கொடுத்து, "கெட்டிக்காரன்!" என்று சொன்னார். அதனால் முத்துசாமி ஐயர் கர்வமோ மகிழ்ச்சியோ கொள்ளாமல், "நான் என்ன அவ்வளவு கெட்டிக்காரனா! நான் எழுதிய கணக்கு என் நினைவில் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!" என்று சொன்னார். ஐயரின் அடக்கத்தையும் ஞாபகசக்தியையும் பார்த்தீர்களா!

பிள்ளைகள் இப்படிஅல்லவோ இருக்கவேண்டும்.


## 2. பொதுஅறிவு

முத்துசாமி ஐயரவர்கள் நல்ல உழைப்பும், ஊக்கமும் உள்ளவராய் இருந்தார். அவற்றோடு அவரிடம் பொது அறிவும் நிறைந்திருந்தது. அந்தப் பொதுஅறிவும் பல நல்ல குணங்களும் அவரிடம் பொருந்தியிருந்ததனால் முத்துசாமிநாயகர் அவரைக் கல்வியில் உயர்த்த வேண்டுமென்று நினைத்தார்.

முத்துசாமி ஐயர், தம்முடைய வாழ்க்கையின் முன்னேற்றமாகிய ஒவ்வொரு படியிலும் முயற்சியினாலேயே ஏறினார்கள். முயற்சி இல்லாவிட்டால் யார் எவ்வளவுதான் உதவி செய்தாலும் முன்னேற முடியுமா? முத்துசாமிஐயரிடம் எந்தச் செய்தியையும் ஆழ்ந்து கவனிக்கும் வழக்கம் அமைந்திருந்தது. அஃது அவருடைய எல்லாநற்குணங்களுக்கும் கிரீடம் வைத்ததுபோல் இருந்தது. அஃது அவருடைய பெருமைக்கு மெருகு கொடுத்தது என்றும் சொல்லலாம். அதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

ஒரு கார்த்திகை மாதத்தில் மூன்று நாள் தொடர்ச்சியாய் மழை பெய்தது. அதனால், குளம் குட்டைகளிலும் வாய்க்கால்களிலும் தண்ணீர் கட்டுக் கடங்காமல் பெருகியது. சில இடங்களில் குளக்கரை உடைந்து தண்ணீர் வெளியே போக ஆரம்பித்தது. மக்கள் வருந்தித் தங்களால் முடிந்த வரையில் கரைகளைச் சீர்ப்படுத்தினர்.

ஒருநாள் தாசில்தார் முத்துசாமிநாயகர் காலையில், தமது வீட்டில் உட்கார்ந்து ஆபீஸ்வேலை ஒன்றைச் செய்துகொண்டிருந்தார். அப்போது பக்கத்துக் கிராமத்திலிருந்து சில குடியானவர்கள் வந்து அவரைக் கண்டு மரியாதை செய்து நின்றனர். வந்த காரணம் என்னவென்று அவர்களைத் தாசில்தார் கேட்டார். உடனே குடியானவர்கள் அவரைப் பார்த்து, "ஐயா, மூன்று நாளாகப் பெய்த பெருமழையினால் எங்கள் ஊரில் உள்ள பெரிய குளம், சிறிய குளம் இரண்டும் கரை உடைந்து போயின. தண்ணீரெல்லாம் வெளியே போய்க்கொண்டிருக்கின்றது. எங்களால் முடிந்தவரையில் பார்த்தோம்; முடியவில்லை. உடைந்த கரைகளைக் கட்டுவதற்குப் பல கூலியாட்கள் வேண்டும். செலவும் அதிகம் ஆகுமென்று தெரிகிறது. எங்களுக்கு அவ்வளவு செலவிடச் சக்தி இல்லை. ஆகலின், உடைந்துபோன குளக்கரைகளைச் சர்க்காரே தயைசெய்து கட்டிக் கொடுத்தால் எங்களுக்கு எவ்வளவோ நன்மை உண்டாகும். இல்லாவிட்டால் ஆற்றிலிருந்து வாய்க்கால்மூலம் குளத்திற்கு வருந் தண்ணீரும், மழைநீரும் குளத்தில் தங்காமல் வெளியே போய்விடும். போனால், அடுத்த வெயிற்காலத்தில் நாங்கள் குடிப்பதற்கும், ஆடு மாடுகள் குடிப்பதற்கும் தண்ணீரே


ES

இராது. அதனால் உண்டாகக்கூடிய துன்பத்தை எங்களால் தாங்கமுடியாது" என்று சொன்னார்கள்.

தாசில்தார் நல்லவர். ஆகலின், அவர் தம் சேவகனைத் தம் கச்சேரிக்கு அனுப்பி அங்குக் குமாஸ்தா யாராவது இருந்தால் உடனே அழைத்து-வரச் சொன்னார்.

சேவகன் கச்சேரிக்குச் சென்றான். காலை-நேரமாதலால், அங்கே குமாஸ்தாக்களுள் ஒருவரும் அப்பொழுது இல்லை. ஆனால், இளைஞராகிய முத்துசாமி ஐயர் கைகளைப் பின்புறத்தில் சேர்த்-துக்கொண்டு, கச்சேரியில் ஒட்டப்பட்டிருந்த ஏதோ ஒரு சர்க்கார்விளம்பரத்தைத் தலைநிமிர்ந்து படித்துக்கொண்டிருந்தார்.

சேவகன் அவரிடத்தில் தான் வந்த செய்தி-யைச் சொல்லி. "யாராவது குமாஸ்தா வந்திருக்கி-றார்களா?" என்று கேட்டான்.

"இல்லை; ஒருவரும் வரவில்லை; நான் வேண்டு-மானால் வருகிறேன்" என்று சொல்லிச் சேவக-னோடு சென்று தாசில்தாரைக் கண்டார்.

கண்டவுடன், தாசில்தாரை நோக்கி, "நேரம் ஆகவில்லை. ஆகலின், குமாஸ்தாக்களுள் ஒருவரும் வரவில்லை. உங்களுக்கு விருப்பமானால், நான் இவர்களோடு இவர்கள்கிராமத்திற்குச் சென்று உடைப்புக்களைப்பற்றிய விவரங்களை அறிந்து வருகிறேன்" என்று ஐயர் சொன்னார்.

"இது கணக்குவேலை அல்லவே! இதற்கு அனுபவம் அல்லவோ வேண்டும். நீ போய் என்ன செய்வாய்? என்னென்ன செய்யவேண்டும் என்-

பதைத் தலைமைக்குமாஸ்தா போனல்தான் சரியாகத் தெரிந்து வருவார். இருந்தாலும், பிறகு அவர் போகட்டும். நீ இவர்களோடு இப்போது சென்று அந்த உடைப்புக்களைப்பற்றி உன்னலானதைத் தெரிந்துகொண்டு வா" என்று சொல்லி, தாசில்தார் தம்மைக் காணவந்த கிராமவாசிகளோடு முத்துசாமி ஐயரை அனுப்பினர்.

கிராமவாசிகளோடு சென்ற ஐயர் குளங்களின் உடைப்புக்களைப் பார்த்தார்; உடைப்புக்களின் விவரங்களைச் சரியாகக் குறித்துக்கொண்டார்; உடைப்புக்களைச் சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், அதற்கு எவ்வளவு செலவு பிடிக்குமென்பதைப்பற்றியும் செம்மையாகத் தெரிந்துகொண்டு திரும்பினர். திரும்பியவர் முத்துசாமிநாயகரைக் கண்டு தம்முடைய குறிப்பையும் விவரத்தையும் தெளிவாகத் தெரிவித்தார்.

ஐயர் சொல்லியவைகள் சரியாய் இருக்கலாமென்றுதான் தாதில்தாருக்குத் தோன்றியது. இருந்தாலும், ஐயர் இளைஞர் அல்லவா! ஆகலின், அவர்வார்த்தையில் முழுநம்பிக்கை கொள்ளாமல் உடைப்புக்களைப்பற்றிய விவரங்களை அறிந்து வருமாறு தம் தலைமைக்குமாஸ்தாவைத் தாசில்தார் அனுப்பினர். தலைமைக்குமாஸ்தா சென்று எல்லாவற்றைப்பற்றியும் விமரமாகத் தெரிந்துகொண்டு திரும்பி வந்து அவற்றைப்பற்றித் தாசில்தாரிடம் சொன்னர். தலைமைக்குமாஸ்தா சொல்லியவைகளும் முத்துசாமிஐயர் சொல்லியவைகளும் ஒன்றுக்கொன்று பொருத்தமாய் இருந்ததை உணர்ந்த முத்துசாமி நாயகருக்கு ஐயரவர்களிடத்தில் அளவு கடந்த மதிப்பு உண்டாயிற்று.

'இளைஞராகிய ஐயரைப் படிக்கவைத்தால் அவர் முன்னேற்ற மடைவார்' என்று நாயகர் நினைத்தார். உடனே அவர், முத்துசாமி ஐயருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, படிக்கச் செய்தார்.

முத்துசாமி ஐயர் கணக்குவேலையை விட்டு விலகி, பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நன்றாகப் படித்து, பீ. ஏ. பரிட்சையில் தேர்ச்சி பெற்று, பலவித வேலைகளில் அமர்ந்திருந்து, கடைசியில் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் **(High Court)** முதல்தர முதல் இந்திய நீதிபதியாய் விளங்கினார் நற்பெயர் பெற்றார்.

இவ்வளவு உயர்வும் ஐயரவர்களுக்கு இருந்த சிறந்த அறிவினால் ஏற்பட்டதல்லவா ?

## 3. எல்லாருக்கும் ஒரே நீதி

முத்துசாமி ஐயர் படிப்படியாக உயர்ந்து பலவித உத்தியோகங்களில் இருந்தார். பெரும்பாலும் அவர் நியாயாதிபதியாகவே வேலை பார்த்துவந்தார்.

முத்துசாமி ஐயர் நியாயத்திலிருந்து ஒரு சிறிதும் தவறியதே இல்லை. ஏழை பணக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், உயர்ந்த உத்தியோகஸ்தர் தாழ்ந்த உத்தியோகஸ்தர் என்று இப்படியெல்லாம் அவர் வித்தியாசம் பாராட்டுவதில்லை. நீதி என்றால் எல்லாருக்கும் நீதிதான். ஆகலின், குற்றவாளிகளும் நியாயமில்லாதவர்களும் அவரிடத்தில் வழக்காடப் போவதென்றால் நடுங்குவார்கள். வக்கீல்களும் அப்படித்தான்.

ஐயரவர்கள் எல்லாவழக்காளிகளையும் எல்லா வக்கீல்களையும் வித்தியாசமில்லாமல் ஒரே வித

மாகத்தான் கவனிப்பார்கள்; புதிய வக்கீல் பழைய வக்கீல், திறமையுள்ள வக்கீல் திறமை யில்லாத வக்கீல் என்னும் பாகுபாடுகளை மனத்திற் கொண்டு அதற்கேற்றபடி நடக்கமாட்டார்கள்; எல்லாரையும் ஒரேவிதமான பெருமையுடன் தான் நடத்துவார்கள்; வழக்கு நடக்கும்போது பழைய வக்கீல் புதிய வக்கீலை வெருட்டுவதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். புதிய வக்கீல்கள் வழக்கில் நல்ல ஒரு சட்டத்தை எடுத்துக்கொண்டு சொல்லத் தெரியாமல் திகைத்தால், சில சமயங்களில் ஐயரவர்கள் தாமே அந்தச் சட்டத்தை எடுத்துக்கூறி அவர்களுக்கு உதவுவார்கள்.

எப்பொழுதும் ஐயரவர்கள் நியாயத்திலிருந்து தவறியதே இல்லை என்பதை விளக்க இங்கு ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்:

சென்னையில் ஐயரவர்கள் 'மாஜிஸ்ட்ரேட்' பதவியிலிருந்து நியாயம்செலுத்திய காலத்தில் ஒரு வழக்கு அவர்களிடம் விசாரணைக்கு வந்தது.

சென்னை உயர்தர நீதிமன்றத்தில் ஓர் ஐரோப்பியர் நீதிபதியாய் இருந்தார். அவர் ஒரு 'பங்களா'-வில் வாழ்ந்துவந்தார், அந்தப் பங்களாவைச் சுற்றிலும் விசாலமான பெரியதொரு தோட்டமிருந்தது. அந்தத் தோட்டத்திற்குள் யாரும் வரக்கூடா தென்பது அவர்கட்டளை. தோட்டத்திற்குள் நுழையு மிடத்தில், "அன்னியர்கள் உள்ளே வரக்கூடாது" என்று ஆங்கிலமொழியில் எழுதப்பட்டிருந்தது. அதனால், தெரிந்தவர்கள் ஒருவரும் அந்தத் தோட்டத்திற்குள் நுழைவதில்லை.

ஒருநாள் ஆங்கிலம் சிறிதும் தெரியாதவன், ஊருக்குப் புதியவனாகிய ஓர் ஏழை அந்தப் பங்களாப்

பக்கம் போனன். போனவன், "இந்தப் பங்களா-விற்குள் புகுந்து குறுக்குவழியாகப் போனல், போகவேண்டிய இடத்திற்குச் சீக்கிரம் போய்-விடலாம்" என்று நினைத்தான். அப்படியே, கபடமற்றவனுகிய அந்த ஏழை குறுக்குவழி தேடி, அந்தப் பங்களாவிற்குள் நுழைந்து சென்றான்.

அதைக் கண்ட நீதிபதி, அவனைப் பிடித்துக்-கொண்டுவரச்செய்து, "ஏன் இந்தப் பங்களாவுக்-குள் புகுந்தாய்? " என்று கேட்டு அச்சுறுத்தினர்.

அந்த ஏழை ஒன்றுந் தெரியாதவன்; அவன் அஞ்சி ஒன்றும் பதில்சொல்லாமல் விழித்தான். அவன் விழிப்பதைக் கண்ட நியாயாதிபதி, அவன் எதையோ திருட வந்தவன் என்று நினைத்து, அவனுக்கு மயக்கம் வரும்வரையில் நன்ருக அடித்-துப் பங்களாவின் வெளியே கொண்டுபோய்த் தள்ளிவிட்டார்.

பங்களாவின் வெளியில் இந்தச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களுள் ஒருவர் மயக்க-முற்றிருந்த ஏழையைத் தமதுவீட்டிற்குக் கொண்டு-போய் அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தார்; பிறகுஅவர் அந்தஏழையைக்கொண்டே முத்துசாமி ஐயரிடம் ஐரோப்பிய நியாயாதிபதிமீது வழக்குத் தொடுத்து, சாட்சிகளையும் கொண்டுவந்து நிறுத்தினர்.

வழக்கைப் பார்த்தவுடனே முத்துசாமிஐய-ரவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. உயர்தர-நீதிமன்றத்து நீதிபதி குற்றவாளி என்பது அவ-ருக்கு நன்ருகத் தெரிந்தது. ஆகவே, ஐயரவர்கள் ஒருநாளைக் குறிப்பிட்டு அன்று அந்த ஐரோப்பிய

நீதிபதி தம் முன்னால், விசாரணையின்போது, வர-வேண்டுமென்று கட்டளை (Summons) அனுப்பினார்.

அப்போது அவருக்கு மேல்உத்தியோகத்தில் "ஸீனியர் மாஜிஸ்ட்ரேட்"டாய் இருந்தவர் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டார். உடனே அவர் ஐயரவர்களைக் கண்டு, "இப்படிச் செய்யவேண்டாம். உயர்தர நீதிமன்றத்து நியாயாதிபதியை இப்படி இந்த வழக்கில் நேரில் வரச்சொல்லிக் கட்டளை அனுப்புதல் நல்லதன்று" என்று எவ்வளவோ பக்குவமாகச் சொன்னார்.

அதற்கு முத்துசாமி ஐயர், "நீதி என்றால் எல்லாருக்கும் ஒரே நீதிதானே! அவர் உயர்தர நீதிமன்றத்து நியாயாதிபதியாய் இருந்தால் என்ன! அந்த ஏழையை அப்படி அடிக்கலாமா? அவன் தோட்டத்திற்குள் நுழைந்தது குற்றமானால், அதற்கேற்றபடி அவன்மீது நடவடிக்கை எடுத்துக்-கொள்ளவேண்டுமேயல்லாமல், அப்படி அடித்-திருக்கக் கூடாது. நியாயத்தின்முன்னால் எல்லாரும் ஒருநிலையினரே. ஆதலின், அந்த நீதிபதி விசாரணை-யின்போது நேரில் வரத்தான் வேண்டும்" என்று ஒரே உறுதியாகச் சொல்லிவிட்டார்.

பிறகு ஐயரவர்கள் வழக்கை விசாரித்தார்கள். ஐரோப்பிய நீதிபதி வேறு கதியில்லாமையால், நேரிலேயே வந்தார். விசாரணையில் ஐரோப்பிய நீதிபதி குற்றவாளி என்று ஏற்பட்டது. ஐய-ரவர்கள் அந்த ஐரோப்பியருக்கு மூன்று ரூபாய் அபராதம் விதித்தார்கள். பார்த்தீர்களா ஐயரவர்-களின் நீதிஒழுங்கை! மனோதைரியத்தை!

# 9. மாணாக்களது மனத்துயர் தீர்த்தவர்

நமது நாட்டில் ஏற்படும் பலதுன்பங்களுக்கும் காரணம் வறுமையே என்பதை எல்லாரும் அறிவர். நல்லவர்கள் பலர் தீய காரியங்களில் புகுவதற்குக் காரணம் பெரும்பாலும் வறுமையே ஆகும். நாட்டில் உள்ள வறுமையைப் போக்குவதற்கு அரசாங்கம் வழிதேடவேண்டும்; பிரபுக்களும் துணைசெய்ய வேண்டும். வறுமையைப் போக்குவதற்கு முதல்-வழி மக்களைக் கல்வியில் தேர்ந்தவர்களாக்குதல். உலகத்திலுள்ள நாகரிகம் பெற்ற நாடுகளில் நமது நாடே கல்வியில் பின்னே நிற்கின்றது. இப்படியிருப்பது மக்கள்தலைவருக்கு மதிப்பைத் தருமா? எல்லா மக்களையும் கல்வியில் வல்லவர்களாக்காவிடினும், கல்வியில் விருப்பமுள்ளவர்களையாவது கைதூக்கிவிடுவது அவசியமாகும்.

அவ்வாறு கல்வியில் ஆர்வம் மிக்க வறிய மாணாக்கனுக்குச் சாதாரண நிலையில் இருந்தவரொருவர் உதவிசெய்த நிகழ்ச்சியொன்றை ஈண்டுக் குறிக்கின்றேன்.

பல வருடங்கட்குமுன், நாராயண ரெட்டியார் என்பவர் ஒருவர் நாகப்பட்டினத்தில் புத்தகக்கடை வைத்திருந்தார். அவர் மிக்க நல்லவர்; எல்லாரிடத்திலும் பிரியமாகப் பேசுவார்; ஏழைகளிடத்தில் இரக்கங் காட்டுவார்.

ரெட்டியார்கடையில் மக்களுக்கு அவசியமான பலவிதப் புத்தகங்கள் விற்பனைக்கு எப்போதும் இருக்கும். குறைந்த இலாபத்திற்கே அவர் புத்தகங்களை விற்பார். பள்ளிக்கூடத்தில் படிக்கும்

பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்களும் அவர்கடையில் கிடைக்கும். பிள்ளைகளிடத்தில் ரெட்டியாருக்கு எப்போதும் பிரியம் உண்டு. அதனல், பிள்ளைகள் எப்போதும் தங்களுக்கு வேண்டிய புஸ்தகங்களை அவர்கடையிலேயே வாங்குவார்கள்.

தங்களுக்கு வேண்டிய எல்லாப் புஸ்தகங்களையும் வாங்கமுடியாத ஏழைகளாகச் சில பிள்ளைகள் இருப்பார்கள். அவர்களுக்கு ரெட்டியாரவர்கள் சில சமயங்களில் சில புஸ்தகங்களை இனமாகக் கொடுப்பது வழக்கம். ஏழைப்பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமானபோது கடைக்கு வந்து தங்களுக்கு விருப்பமான புத்தங்களை எடுத்து, படித்துவிட்டுப்போக ரெட்டியாரவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படிப் போய்ப் படிக்குஞ் சிறுவர்களுள் நாகலிங்கம் என்னும் பெயருள்ள சிறுவனும் ஒருவன்.

மற்ற ஏழைச்சிறுவர்களைப்பார்க்கிலும் நாகலிங்கம் அடிக்கடி போய்ப் புஸ்தகங்களைப் படிப்பது வழக்கம். கல்வியில் நாகலிங்கத்திற்கிருந்த விருப்பத்தை அறிந்த ரெட்டியாரவர்கள் அவனிடத்தில் தனிப்பிரியம் வைத்திருந்தார்கள்.

நாகலிங்கம் மிக்க ஏழை; தாய்தந்தையரை இழந்தவன்; தன் சிறியதாயாரின் வீட்டில் சாப்பிட்டுப்படித்துக்கொண்டிருந்தான். அவன் சிறியதாயாரும் ஏழைதான்; விதவை. அவளுக்கு இரண்டு பெண்குழந்தைகள் இருந்தார்கள். அவள் தின்பண்டங்கள் செய்து வீட்டின்முன் வைத்து விற்று, அதனல் வரும் ஊதியத்தைக்கொண்டு தன் இரு பெண்குழந்தைகளையும் நாகலிங்கத்தையும்

காப்பாற்றிவந்தாள். தன் துன்பத்தைக் குறைத்துக்கொள்வதற்காக நாகலிங்கத்தை ஏதாவது ஒரு வேலைக்கு அனுப்பலாமா என்று அவள் நினைத்தது உண்டு. ஆனால், நாகலிங்கத்திற்குக் கல்வியில் இருந்த ஆர்வத்தைக் கண்டு அவனை அவள் வேலைக்குச் செல்லும்படி வற்புறுத்தவில்லை.

நாகலிங்கத்திற்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவதற்கு அவன்சிறியதாயாரால் இயலவில்லை. அதனால், நாகலிங்கம் மாதந்தோறும் பலரிடம் பொருள்பெற்றுப் பள்ளிக்கூடச்சம்பளத்தைக் கட்டிவந்தான். நாராயண ரெட்டியாரிடம் நாகலிங்கம் புத்தகவுதவியோடு பொருளுதவியும் பெற்றுவந்தான்.

நாகலிங்கம் படித்த பாடசாலையில் நான்காம் பாரத்தில் சில பிள்ளைகளுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கப்பட்டது. நாகலிங்கம் பலமுறை முயன்றும், அவனுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கப்படவில்லை. உபகாரச்சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாக ஒருநாள் அவன் ஆசிரியர் அவனைப் பார்த்து, "உனக்கென்னடா படிப்பு ஒருகேடு! பிச்சை எடுத்தாவது யாரடா உன்னைப் படிக்கச் சொன்னார்கள்? நீயும் இரண்டு முறுக்கு மசால்வடை செய்து விற்கக்கூடாதா? அல்லது உன் அப்பனைப் போல வண்டி ஓட்டக்கூடாதா!" என்று சொன்னார்.

இப்படிப்பட்ட ஆசிரியரிடத்தில் நாகலிங்கம் முள்ளில் ரோஜாவைப்போல் விளங்கி நன்றாகப் படித்து வந்தான்.

நாகலிங்கம் நான்காவது பாரத்தில் வருடாந்தப் பரீட்சையில் தேர்ந்து ஐந்தாவது பாரத்திற்குச்

சென்றான். அங்கே வருடஆரம்பத்தில் அவன் அதிகமாகப் பள்ளிச்சம்பளம் கட்டவேண்டியதாய் இருந்தது. அவனுக்குப் பொருளுதவி செய்து-வந்தவர்களுட் சிலர் அந்த வருடத்தில் தங்களால் பொருளுதவி செய்ய முடியாதென்று கூறிவிட்-டனர். நாகலிங்கம் கலங்கினான். என்னசெய்வ-தென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுக்-குத் தெரிந்தவர்கள் பலரிடம் சென்று, தான் மேலும் படிக்கவேண்டியதைப்பற்றிச் சொல்லிப்-பொருளுதவி கேட்டான். பெரும்பாலும் அவர்க-ளெல்லாம் படிப்பின் அருமை தெரியாதவர்கள். அதனால் அவர்கள், "படித்தவர்கள் எல்லாரும் என்னடா செய்துவிட்டார்கள் ? நாங்கள் வேலை செய்யவில்லையா; பொருள் சம்பாதிக்கவில்லையா? பணம் இல்லாவிட்டால் படிப்பை நிறுத்திவிடு. எங்கேயாவது போய் ஏதாவது ஒரு வேலையைப் பார். படிப்பாம் படிப்பு! பணம் இல்லாதவனுக்குப் படிப்பு எதற்கு!" என்று சொல்லித் தங்கள் கடமையைத் தீர்த்துக்கொண்டார்கள்.

நாகலிங்கம் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். பள்ளிக்கூடம் திறந்து இரண்டு நாட்களாயின. "இனி மூன்று நாட்களுக்குள் சம்பளம் கட்டாவிட்டால் பெயரை அடித்துவிடுவார்-களே !" என்று நாகலிங்கம் கலங்கினான். அவன் தன் சிறியதாயாரைப்பற்றி நினைத்தான். "அவர்-கள் எங்கே இருந்து இவ்வளவு பொருளைக் கொடுக்-கப்போகிறார்கள் ? அரைரூபாய்க்கு மேற்பட்ட தொகை அவர்களிடம் இருக்க நான் பார்த்த தில்லையே !" என்று எண்ணினான் ; "என்ன செய்யலாம் ?" என்று நினைத்தான். பின்னும்

இரண்டு நாட்கள் சென்றன. மறுநாள், கடைசி-யாக, நாராயண ரெட்டியாரையே கேட்கலாம் என்று நாகலிங்கம் தீர்மானம் செய்துகொண்டான். கடையில் கேட்பதைக்காட்டிலும் வீட்டில்போய்க் கேட்பது நல்லது என்று அவன் நினைத்தான்.

நாகலிங்கம் நாராயணரெட்டியாரின் வீட்டிற்-குப் போனான். ரெட்டியார்வீட்டின் முன்புறத்-தில், தெருவில் ஒரு குப்பைத்தொட்டி இருந்தது. அந்தக் குப்பைத்தொட்டியில் குப்பையும், கழிக்-கப்பட்ட காகிதக்கூளமும் நிறைந்திருந்தன. காகி-தக்கூளத்திற்கு இடையில் ஒரு காகிதவுறை, பாதி கூளத்தில் மறைந்தும் பாதி வெளியில் நீட்டிக் கொண்டும் இருந்தது, தற்செயலாக நாகலிங்கம் அதைக் கவனித்தான். உடனே கையில் எடுத்-தான்; உறையின் மீது நாராயணரெட்டியார் என்று எழுதப்பட்டிருப்பதை வாசித்தான்; உறை சற்றுக் கனமாய் இருப்பதைக் கவனித்தான்; கிழிக்கப்பட்டிருந்த அந்த உறையின் உள்ளே பார்த்தான். ஆச்சரியமடைந்தான்; காணப் பட்டவைகளை வெளியிலே எடுத்தான். ஐந்துரூபாய் நோட்டுக்கள் ஐந்து இருந்தன.

“ரெட்டியாரவர்களுக்கு யாரோ இந்த நோட்-டுக்களைக் காகிதவுறைக்குள் வைத்து ஆள்மூலம் அனுப்பியிருக்கிறார்கள். அவர் இதைப் பிரித்துப் பார்த்து எங்கேயோ வைத்திருக்கிறார். வேலைக்-காரி குப்பையோடு குப்பையாக இதைக் கூட்டிக்-குப்பைத்தொட்டியில் கொண்டுவந்து கொட்டி-விட்டாள்” ‘என்று நாகலிங்கம் தீர்மானித்தான்.

பின்னர் நாகலிங்கம் நோட்டுக்கள் அடங்கிய காகிதவுறையைச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு ரெட்டியாரின் வீட்டிற்குள் சென்றான். ரெட்டியார் சற்றுமுன்தான் வெளியிற் சென்றதாக வீட்டிலிருந்த ஒருவர் கூறினர்.

நாகலிங்கம் வெளியில் வந்து, நோட்டுக்களைப்பற்றிச் சிந்தித்தான்; அவைகளை என்ன செய்வதென்று எண்ணினன். அன்று பள்ளிக்கூடத்தில் சம்பளம் கட்டாவிட்டால் தன் பெயரைப் 'பெயர்ப்பட்டி'யிலிருந்து எடுத்துவிடுவார்கள் என்னும் எண்ணம் அவன்மனத்தில் தோன்றியது. "கையில் இருக்கும் நோட்டுக்களைக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குக் கட்டவேண்டிய சம்பளத்தைக் கட்டிவிட்டால் என்ன!" என்று நாகலிங்கம் கருதினன்; "பிறர்பொருளை அவர்கள்அனுமதி இல்லாமல் உபயோகிப்பது திருட்டுச்செயலாகுமே!" என்று எண்ணினன்.

"ரெட்டியார் வரும்வரையில் காத்திருப்போம்; பிறகு அவரிடம் நமது அவசரத்தைச் சொல்லி இந்த நோட்டுக்களை அவரிடம் கொடுப்போம்; அதன்பின் அவர்கருத்துப்படி நடப்போம்" என்று நாகலிங்கம் தீர்மானித்தான்; ரெட்டியார்வீட்டுத் தெருத் திண்ணையின்மீது உட்கார்ந்தான். அரைமணி நேரம் ஆயிற்று. ரெட்டியார் அன்றைக்கு முதல்நாள் ஊருக்குப் போனதாக அப்போது அங்கே வந்த அவர்மகன் சொன்னன். உடனே நாகலிங்கம் தன் வீடு போய்ச் சேர்ந்தான்; பிறகு உண்டுவிட்டு வழக்கம்போலப் பள்ளிக்கூடம் சென்றான். நோட்டுக்கள் அவனிடம் இருந்தன. சம்பளம் கட்டுவதற்காகச் சில பிள்ளைகள் சென்றார்கள். அவர்க-

ளோடு நாகலிங்கமும் சென்ருன். அவனுக்குப்படிக்கவேண்டும் என்பது ஒரே ஆசை. பணத்திற்கு வேறு வழி இல்லை. தான் செய்வது தவறு என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும், என்ன செய்வான்! ரெட்டியாரோ ஊரில் இல்லை. அவர்பணம் என்று தெரிந்திருந்தும், அவர்உத்தர வில்லாமல் அதைத் தான்உபயோகிப்பது திருட்டுச்செயலாகும் என்று அவன் தீர்மானித்தான். ஆயினும், அன்று சம்பளம் கட்டாவிட்டால், பள்ளிக்கூடப் 'பெயர்ப்பட்டி' யிலிருந்து தன் பெயரை எடுத்துவிடுவார்கள் என்பதை அவன் உணரும்போது அஞ்சினுன்; பிறகு மனக்கலக்கத்துடன், தன் கையில் இருந்த நாராயண ரெட்டியார்நோட்டுக்களைக் கொண்டு பள்ளிக்கூடத்திற்குக் கட்டவேண்டிய சம்பளத்தைக் கட்டிவிட்டு, மிகுதிப்பணத்தைப் பத்திரமாகத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டான்.

இரண்டு தினங்கள் சென்றன. அப்போதும் தான் செய்தது திருட்டுவேலை என்று எண்ணியெண்ணி நாகலிங்கம் வருந்தினுன். அவன் ஒரு பைத்தியக்காரனைப்போலக் காணப்பட்டான். அவன்மீது குற்றமா? சொல்லுங்கள். கல்வியில் இருந்த கருத்து அவனை அவ்வாறு செய்யச்செய்தது. அவனுக்கு நாட்டாரோ, அரசாங்கமோ, அவன்பள்ளிக்கூட அதிகாரிகளோ உதவி செய்திருந்தால், அவன் இவ்வாறு நடந்திருப்பானு? நடந்திருக்கமாட்டான்.

இரண்டு நாட்கள் சென்ற பிறகு, ஊருக்குச்சென்றிருந்த ரெட்டியாரவர்கள் திரும்பிவந்தார்கள். அவர்கள் வந்த செய்தியை நாகலிங்கம் அறிந்தான். ரெட்டியார் வீட்டில் ஓய்வாக

இருக்கும்நேரம் இது என்பது நாகலிங்கத்திற்குத் தெரியும். ஆகலின், நாகலிங்கம் அந்த நேரத்திற் சென்று ரெட்டியாரைக் கண்டான்; சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அங்கே வந்த ரெட்டியார்மகன், நாகலிங்கத்துடன் படிப்பவன், "அப்பா, தொலைந்துபோன இருபத்தைந்து ரூபாய் நோட்டுக்கள் கிடைத்தனவா?" என்று கேட்டான்.

"இல்லை" என்று ரெட்டியார் பதில் சொன்னார்.

இந்த வார்த்தை நாகலிங்கத்தின் மனத்தை முள் குத்துவதுபோலக் குத்தியது. அவன்முகம் வாடியது. அதே நேரத்தில், ரெட்டியார் நாகலிங்கத்தின் முகத்தைப் பார்த்தார்.

"என்ன நாகலிங்கம், ஏதோ கவலையாய் இருக்கிறாயே! உன் கவலைக்குக் காரணம் என்ன? பள்ளிக்கூடத்திற்குக் கட்டவேண்டிய பணத்திற்கு அலைந்துகொண்டிருந்தாயே; பணம் கிடைத்ததா?" என்று கேட்டார் ரெட்டியார்.

நாகலிங்கம் பதில் சொல்லவில்லை. அவன் ரெட்டியாரை நன்றாகப் பார்த்தான்; ரெட்டியாரும் அவனை நன்றாகப் பார்த்தார். நாகலிங்கத்தின் கண்கள் கலக்கமடைந்து, நீரைச் சிந்துவதற்குத் தயாராய் இருந்தன.

"உன் கலக்கத்திற்குக் காரணம் என்ன? கவலைப்படாதே! உள்ளதைச் சொல். உனக்குப் பணம் கிடைக்கவில்லையா? அதற்காக ஏன் இவ்வளவு கவலைப்படுகிறாய்? வேண்டியதை நான் தருகிறேன், கவலைப்படாதே" என்றார்.

நாகலிங்கம் மௌனமாய் இருந்தான். தாங்கமுடியாமல் அவன் கண்கள் நீரைச் சிந்தின. ரெட்டியார் இயற்கையிலேயே இளகிய மனம் உள்ளவர்; பிறர்மனம் வருந்தச் சகிக்கமாட்டார். நாகலிங்கத்தின் கண்களிலிருந்து நீர் வடிவதைக் கண்டு, "நாகலிங்கம், ஏன் இப்படி என்றும் இல்லாத விதமாக வருந்துகிறாய்? காரணம் என்ன?" என்று கேட்டார்.

நாகலிங்கம் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ரெட்டியாரைப் பார்த்து, "தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தங்களிடமிருந்து காணாமற்போன இருபத்தைந்து ரூபாய்களும் எனக்குக் கிடைத்தன. பள்ளிக்கூடச்சம்பளம் கட்டிவிட்டேன். பாக்கித்தொகை இதோ இருக்கிறது. இதை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் செய்தது பெரும்பிழை" என்று சொல்லிக்கொண்டே சில ரூபாய்களையும் சில்லறையையும் ரெட்டியார்எதிரில் வைத்தான்.

ரெட்டியாருக்கு எல்லாம் புதுமையாகத் தோன்றின. அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"காணாமற்போன நோட்டுக்களை நீ எப்படி எடுத்திருக்கக்கூடும்? நான் வீட்டிற்குள் மேஜையின்மீது அல்லவோ வைத்தேன். நீ அங்கே வந்திருக்கமுடியாதே! உன் வார்த்தை எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறதே!" என்று ரெட்டியார் சொன்னார்.

பிறகு நாகலிங்கம் அச்சத்துடன் எல்லாச்செய்திகளையும் விவரமாகச் சொல்லி, "என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும்" என்று வேண்டினான்.

உடனே ரெட்டியார் நாகலிங்கத்தை நோக்கி, "தம்பி, நாகலிங்கம், நீ உலகத்தில் சிறந்து வாழ்வாய்; கவலைப்படாதே. குப்பைத்தொட்டியிலிருந்து எடுத்த நோட்டுக்களைப்பற்றி வெளியில் உன்னைப்போல் சொல்லக்கூடியவர்கள் பலர் இருக்கமாட்டார்கள். நீ யோக்கியன். நீ செய்த காரியம் குற்றமாகாது. உன்னைப்போல உண்மையைப் பேசக்கூடிய பிள்ளைகள் சிலராவது இக்காலத்தில் இருப்பார்களா என்பது சந்தேகமே! கவலையை விட்டுவிடு. உன் யோக்கியதைக்காக நான் உன்னை மெச்சுகிறேன். 'எப்படியாயினும் சரியே. நான் செய்தது திருட்டுவேலைதான்' என்று நீ சொல்லுகிறாய். நான் அப்படி நினைக்கவில்லை. நீ செய்தது நல்ல வேலையே. நீ எதுவரை வேண்டுமானாலும் படி. உனக்கு வேண்டிய எல்லாவுதவிகளையும் நானே செய்து வருகிறேன்" என்று சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் நாகலிங்கத்தின் மனம் மகிழ்ந்தது; முகமும் மலர்ந்தது.

ரெட்டியார் தாம் கூறியபடியே நாகலிங்கத்திற்கு உதவி செய்துவந்தார். நாகலிங்கம் "மெட்ரிகுலேஷன்" வகுப்புவரையில் படித்துப் பரீட்சையில் தேர்ந்தான். ரெட்டியாரின் உதவியினால் தென்னிந்திய இரயில்வே கம்பெனியில் வேலை பெற்று, இறுதியில் முந்நூற்றைம்பது ரூபாய்வரையில் சம்பளம் பெற்றான்.

ரெட்டியாரின் அந்திமகாலம்வரையில் நாகலிங்கம் அவரைத் தன் தந்தையாரைப்போலவே பாவித்து நடந்துவந்தான்.

Wrapper printed by Parker Pr[illegible] Madras, [illegible]